பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 21 வெள்ளிக்கிழமை 05.05.2023 கதிர் 176

# வடக்கு மாகாணத்தில் 3 முதலீட்டு வலயங்கள்

## காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளத்தில் அமையும்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 05

வடக்கில் 3 முதலீட்டு வலயங்களை அமைப்பதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அதற்குரிய அமைச்சரவைப் பத்திரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வியாழக்கிழமை, அதன் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநரான ஜீவன் தியாகராஜா மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிநிதியால் வடக்கு முதலீட்டு வலயங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

☞ 2

## இது ரகசியம் அல்ல!

தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்கப்படத் தொடங்கியபோது வளாவிருந்து விட்டுகட்டி முடிக்கப்பட்ட பின்னர் போராட்டம் நடத்துவது குறித்துத்தான் முகப் புத்தகம் போன்ற சமூக ஊடகங்களில் கழுவி ஊற்றுகின்றார்கள். எங்கள் அரசியல்வாதிகளின் செயல்திறன் அவ்வளவு மெச்சத்தக்கது என்பது நாம் வாங்கி வந்த வரம் என்று சொல்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

இந்தப் பகுதியில் விகாரையை அமைப் பதற்கான முயற்சி 2019ஆம் ஆண்டு தொடங்கியது. தையிட்டியில் புதிய விகாரை அமைக்கப்பட்டிருக்கும் பகுதியில் நயினாதீவு நாக விகாரைக்குச் சொந்தமான உறுதியுடன் கூடிய ஏழுரைப் பரப்புக் காணி உள்ளது. அந்தக் காணியில்

☞ 2

## இனி வாய்ப்பில்லை கம்பன்பில உறுதி

நாம் ராஜபக்ககளுடன் இனியொருபோதும் ஒன்றிணையப் போவதில்லை என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதுல்கோட்டையில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே தின கூட்டத்துடன் மக்களாணையை வென்று விட்டோமென பொது ஜன பெரமுன குறிப்பிடுவது நகைப்புக்குரியது.

☞ 2

## ஒரு மாதத்துக்குள் 2 எரிபொருள் நிறுவனங்கள் சந்தையில் நுழையும்

450 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தலா 150 வீதம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு புதிய வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர அறிவித்துள்ளார். ஒரு மாதத்துக்குள் புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முதற்குழு செயற்பாடுகளைத் தொடங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் வியாழக் கிழமை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கும், அமைச்சர் காஞ்சன விஜயசேரவுக்கும் இடையிலான

☞ 2

## விடைத்தாள் மதிப்பீட்டுக்கு செல்ல பல்கலை ஆசிரியர்கள் நேற்று முடிவு

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் முதல் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அநீதியான வரிக்கொள்கைகளை மாறுசீரமைத்தல், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை மீளப்பெறல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு மாதங்களுக்கு மேலாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.

அதன் காரணமாக உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் இருந்தும் அவர்கள் விலகியிருந்தனர். அத்துடன், தமது பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினால் மட்டுமே எந்தவொரு தீர்வுக்கும் வரமுடியும் என்றும் அறிவித்திருந்தது..

இந்நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் நிறைவேற்றுக்

☞ 2

## சட்டவாட்சி, ஊழலுக்கு தீர்வு காண நாணய நிதியத் திட்டம் முயற்சி

### அதன் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமானது சட்டவாட்சி மற்றும் ஊழல் விவகாரங்களிற்கும் தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்கின்றது என்று அதன் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பொருளாதார நிலைவரம் தொடர்பாக வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவுத் திட்டம் என்பது வருமான அடிப்படையிலான ஒருங்கிணைப்பாகும் இது பொருளாதாரத்திற்கு திடத்தன்மையை வழங்குகின்றது.

அந்த வகையில், எமது திட்டம் நிதி ஒருங்கிணைப்பு வருமான ஒருங்கிணைப்பினை அடிப்படையாகக் கொண்டது.

☞ 2

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவாரா பஸில்?



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வேட்பாளரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி களமிறக்கும். அந்த வேட்பாளர் பஸில் ராஜபக்ஷவாகக் கூட இருக்கலாம் - என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

☞ 2

### தையிட்டி விகாரைக்கு எதிராக

## இன்றும் நடக்கும் போராட்டத்திற்கு மக்களைத் திரண்டு வர அழைப்பு

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிரான இன்றைய போராட்டத்தில் கலந்துகொள்ள அணிதிரண்டு வருமாறு தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிராகவும், தனியாருடைய காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் புதன்கிழமை பிற்கல் 3.00 மணிக்கு தொடங்கப்பட்ட கவனீர்ப்புப் போராட்டம் இரவு பகலாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இப்போராட்டத்தை தடைசெய்வதற்கான உத்தரவினைக் கோரி நீதிமன்றுக்கு சென்ற பொலிஸார், பொய்களைக் கூறி நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தித் தடையுத்தரவைப் பெற முயன்றனர். எனினும் தையிட்டி மக்கள் சார்பில் மல்லாகம்

☞ 2

## காய்ச்சல் ஏற்பபட்டால் உடன் வைத்தியசாலைக்கு ஓடுங்கள்

கொரோனா மற்றும் இன்புளுவன்சா ஆகியவற்றை வேறுபடுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில், காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லவேண்டியது அவசியமாவதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா எஸ்.ஆரியரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் வியாழக் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது. இவ்வாண்டில் இதுவரையில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

☞ 2

## இரவில் நடமாடினால் உடன் கைதுசெய்வோம்

### போராட்டக்காரர்களுக்குப் பொலிஸார் மிரட்டல்





தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்கள் இரவில் நடமாடினால் கைது செய்வோம் என்று பொலிஸார் மிரட்டல் விடுத்துள்ளனர் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

விகாரையின் செயற்பாடுகளுக்கோ, விகாரைக்கு வரும் பக்தர்களுக்கோ இடையூறு ஏற்படுத்தாத வகையில் போராட்டம் நடத்தலாம் என்று நீதிமன்றம் கட்டளை வழங்கியதை அடுத்து, விகாரை முன்பாகவுள்ள வெற்றுக் காணியில் மக்கள் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறு

☞ 2

## மஹிந்தவின் நிலைப்பாடு என்ன?

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை பகிரங்கப் படுத்தவேண்டும்.

சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைக்கு எதிரானது என்பதை ஆளும் தரப்பினர் நினைவில்

☞ 2

## படையிர் தமது வழிபாட்டுக்காக விகாரை அமைக்கலாம் - டக்ளஸ்



(ந.லோகதயாளன்)

படையினர் தங்கியுள்ள இடங்களில் அவர்களின் வழிபாட்டுக்காக விகாரைகளை அமைக்க முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் வியாழக் கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

''யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படுவது தொடர்பில் நேற்று ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கூறிய போதுதான் அறிந்து கொண்டேன். அந்த விகாரை தொடர்பில் முழுமையான விவரங்களை அறியாமல் கருத்துச் சொல்லமுடியாது. அந்த விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி பிரதேச செயலர் கூட்டத்தில் தெரிவித்தார். அது தொடர்பில் அவரிடம் அறிக்கை கோரியுள்ளேன்.

படையினர் தாம் தங்கியுள்ள இடத்தில் தமது வழிபாட்டுக்காக விகாரை அமைக்கலாம். வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பல இடங்களில் அவ்வாறு அவர்கள் அமைத்த வழிபாட்டு இடங்கள் இன்று அநாதரவாக உள்ளன'' என்றார்.

## 264 கடலட்டைப் பண்ணைகள் உண்டு இன்னும் 100க்கு விரைவிலே அனுமதி

### யாழ். மாவட்டத்திலேயே இந்த நிலை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை 264 கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நெக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் நிருபராஜ் தெரிவித்தார். விரைவில் மேலும் 103 பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வியாழக்கிழமை இடம்பெற்ற போது கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் உண்மைகளைத் தெரிவிக்குமாறு மீன்பிடித்துறை அமைச்சர் நாராப் பணிப்பாளரைக் கேட்டுக்கொண்டதை அடுத்து அவர் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

“கடலட்டைப்பண்ணைகள் தொடர்பில் புரளி கிளப்புகின்றனர். சீனர்களுக்குகொடுக்கப்படுவதாகவும் சொல்கின்றனர். கோயபல்ஸ் போன்று பொய்யை திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகி விடும் என்று நினைத்து அவ்வாறு சொல்கின்றனர். எனவே கடலட்டை பண்ணை தொடர்பில் தெளிவுபடுத்துங்கள்'' என்றார் அமைச்சர்.

பதிலளித்த நெக்டா பணிப்பாளர், யாழ். மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்ட 264 கடலட்டைப் பண்ணைகளுக்குள் ஒன்றுகூட வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

''இன்றுவரை யாழ். மாவட்டத்தில் 264 கடலட்டைப் பண்ணைகளுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் 103 கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கு-வதற்கான ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அனுமதியை வழங்கும்

☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரையை அமைப்பதற்கு வலி. வடக்கு பிரதேச சபையிடம் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. அதனைதமதுமேதாவித்தனமான அணுகுமுறையால் தடுத்து நிறுத்தியது சபை. புத்தசாசன அமைச்சின் அனுமதியைப் பெற்று வந்தால் விகாரைக்குச்சபை அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று பதில் வழங்கியது வலி. வடக்கு சபை. இதையடுத்து அந்தக் காணியில் விகாரை அமைக்கும் பணி முடங்கியது. இன்று வரைக்கும் அந்தக் காணியில் விகாரை அமைக்கப்படவில்லை. அந்தக் காணி ஒரு பிக்குவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

இப்போது கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அந்தக் காணியில் கட்டப்படவில்லை. அதையொட்டியுள்ளதமிழ்மக்கள் பலரின் காணிகளையும் உள்ளடக்கிய (இது பற்றிய முழுமையான விவரங்கள் அடங்கிய கட்டுரை நேற்றைய மாலைப் பதிப்பில் வெளியாகி இருக்கின்றது) 8 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்தே இந்தப் புதிய விகாரை கட்டப்பட்டுள்ளது. அதாவது முன்னைய விகாரைக்கும் அனுமதி கிடைத்தால் இந்த இடத்தில்அடுத்தடுத்துஇரண்டு விகாரைகள் அமையும். புதிய விகாரையைக்கட்டியிருப்பவர் மற்றொரு பிக்கு. நயினா தீவுக்குரிய ஏழரைப் பரப்புக் காணியைத் தன் வசம் வைத்துள்ள பிக்கு அல்ல இவர். புதிய விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிக்குள் சில சூட்சுமங்கள் இருக்கின்றன. பல தனியார்களுக்குச்சொந்தமானவை இந்தக் காணிகள். எனினும் அவற்றின் மத்தியிலுள்ள சூட்சுமத்தை நன்கு புரிந்துகொண்டே அந்தக் காணியில் விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு காணிகள் தொடர்பான திணைக்களங்களின் அதிகாரிகளினதும் படை அதிகாரிகளினதும்முழு ஆதரவும் ஆசீர்வாதமும் அந்தப் பிக்குவிற்குக் கிடைத்திருக்கின்றது.

எந்த வகையிலான சட்டப் போராட்டங்களை மேற்கொண்டால்கூட அந்த இடத்திலிருந்து விகாரையை அகற்றுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதை அந்தச் சூட்சுமத்தை அறிந்தவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். விகாரையைச் சுற்றியுள்ள தமிழர்களின் நிலங்களை ஒருவேளை மீட்க முடியலாம். அதுவும் எந்தளவு தூரத்திற்கு என்கிற கேள்வி இருந்தாலும், ஒரு கருதுகோளாக அப்படி வைத்துக்கொள்ளலாம். ஆனால் விகாரை அமைந்திருக்கும் இடத்தை யாராலும் மீளப்பெறமுடியாது என்பது தான் உண்மை நிலை.

இந்தத் திஸ்ஸ விகாரையை அமைப்பதற்கானநடவடிக்கை தொடங்கியபோதே இதனை அப்போது பிரதமராக இருந்தவரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவரைக்கும்தமிழ்அரசுக் கட்சிஎடுத்துச்சென்றது. அதன் நாடாளுமன்றஉறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் விகாரைக் கட்டுமானம் தொடர்பாகவும் அது அமையவுள்ள காணிகளின் உரிமையாளர்கள் விவகாரங்கள் குறித்து ஒரு பெரியபைலையேகொடுத்தார். அதைவாங்கிவைத்தவர்தான் ரணில் அதன் பின்னர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மகிந்தவோடு சேர்ந்துகொண்டு ரணிலின் ஆட்சியைக் கவிழ்க்க மைத்திரி செய்த சதிகளின் பின்னணியில் இந்த விவகாரம் அடியோடு பின்னர் மறக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் கொரோனா, பொருளாதார நெருக்கடிகள் எல்லாம் அடுத்தடுத்துவர இந்த விவகாரம் ஒரு பொருட்டாக மதிக்கப்படவேயில்லை. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இல்லாவிட்டால் மட்டும் ரணில் எதையும் செய்து கிழித்திருக்கப்போவதில்லை என்றாலும் சொவதற்கான சாட்டுக்களாக இவையெல்லாம் அமைந்திருக்கின்றன.

இப்படி 2019, 2020 காலப் பகுதிகளில் தமிழ் அரசுக்கட்சிஇந்த விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் திரிந்த காலத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அது பற்றி அலட்டிக்கொண்டதே இல்லை. எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தியதில்லை. குறைந்தபட்சம் தமிழ் அரசுக்கட்சியின்எதிர்ப்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்ததுகூட இல்லை. ஆனால், இன்று முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ் விகாரை பற்றிப் பேசும் போது, தங்களுக்கு அருகில் இதுபோன்ற பிரச்சினை வரும் வரைக்கும் காத்திராமல் யாழ்ப்பாண மக்கள் தையிட்டி விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முன் வர வேண்டும் என்று கேட்கிறார். அதேபோன்று விகாரைக் கட்டுமானம் தொடங்கப்பட்ட போதேமுன்னணியும்சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் அது குறைந்தபட்சம் காத்திரமான எதிர்ப்பாகவாவது பதிவாகி இருக்கும். அப்போது சேர்ந்து குரல்எழுப்பவிரும்பாதவர்கள், விகாரை கட்டி முடிக்கப்பட்ட பின்னர் குய்யோ முறையோ என்று குளறுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

அப்போதுமட்டும்என்றில்லைஇப்போதும்கூட அவர்கள் சேர்ந்துசெல்வதற்குத்தயாரக இல்லைஎன்பதை நேற்றைய சம்பவங்கள் தெளிவுபடுத்தின. நேற்று தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன் உறுப்பினரான அங்கஜனும் போராட்டக்களத்திற்கு ஆதரவளிக்கச்சென்றதைக்கூட முன்னணியினர்விரும்பவில்லை. இவர்கள் எல்லாம் எதற்கு இங்கே வருகின்றார்கள், அரசின் அடிவருடிகள் எல்லாம் எதற்கு வருகிறார்கள் என்று சகட்டு மேனிக்கு விமர்சித்திருக்கிறார்கள். விவரம் கேட்டு ஆரவு தெரிவிக்க வந்த தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் சரியாக முகங்கொடுத்துக்கூடப்பேசவில்லை. ஒப்புக்குப் பேசினார்களே தவிர, இதயசுத்தியோடுநடந்து கொள்ளவில்லை. அவர்களின் ஆதரவாளர்களும் அப்படியே நடந்துகொண்டார்கள்.

அங்கஜன் இராமநாதன் போராட்டக்காரர்களுக்கு என பிஸ்கட்டுக்கள் சோடாக் கள் என்பவற்றை வழங்கியிருந்தார். அவற்றைப் பெற்றுக் கொண்ட அவர்கள் பின்னர் அவற்றைத் தூக்கி வீசி வீசி விட்டார்கள். பிஸ்கெட் பொதிகளும் சோடக்களும் வீதியோரம் அநாதரவாகக் கிடத்தன. கடைசியில் அங்கு நின்றிருந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களே அவற்றையும்தின்று குடித்துத் தீர்த்தார்கள். அந்தளவிற்கு வெறுப்புடனேயே நடந்து கொண்டார்கள் முன்னணியினர்.

"இவர்களுக்கு அரசியல் நாகரிகம்கூத் தெரியவில்லை" என்று விசனப்பட்டார் சம்பங்கள் அனைத்தையும் நேரில் பார்த்த ஒரு ஊடகவியலாளர்.

- இடிமின்னல் -

## வடக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''யாழ்ப்பாண மாவட்டத்தில் காங்கேசன்துறையில்சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ளஇடத்தைநேரில் சென்று பார்வையிட்டுள்ளோம். அங்கே ஓர் முதலீட்டு வலயம் அமைக்க உத்தேசித்துள்ளோம். கிளிநொச்சி மாவட்டத்திலே பரந்தன் இரசாயன தொழிற்சாலை அமைந்திருந்த இடத்தில் ஓர் வலயமும் அதேபோன்று மாங்குளத்தில் 400 ஏக்கரில் ஓர் முதலீட்டு வலயமும் அமைக்கத் தற்போது உத்தேசித் துள்ளோம்'' என முதலீட்டுச் சபையுன் பிரதிநிதி குறிப்பிட்டார்.

## இனி வாய்ப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெம்பல்மைதானத்தில் இடம் பெற்ற மே தின கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையைஅடிப்படை கொண்டு பொது ஜன பெரமுனவுக்கு குறிப்பாகராஜபக்ஷக்களுக்கு மக்களாதரவு எந்த ளவுக்கு உள்ளது என்பதை நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது.

பொது ஜன பெரமுன பிரமாண்டமாக அமைத்த கூடாரங்கள் வெற்றிடமாகவே காணப்பட்டன. நாட்டு மக்களை ஏமாற்றி அரசியல் செய்யலாம் என்ற நிலை மாற்றமடைந்து விட்டது. மக்கள் தெளிவாக உள்ளார்கள். மக்களால்கடுமையாகவெறுக்கப்படும் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரது தரப்பினருடன் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்குப்பெரும்தடையாக அமையும்.

2019ஆம் ஆண்டுக்குப் பிறகு ராஜபக்ஷ குடும்பமே நாட்டை ஆட்சி செய்தது. ராஜபக்ஷக்களின் முறையற்ற பொருளாதாரக்கொள்கையை அமைச்சுப் பதவிகளை வகித்துக் கொண்டு நாங்கள் கடுமையாக எதிர்த்தோம். சுட்டிக்காட்டிய குறைகளை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் திருத்திக் கொள்ளவில்லை. மாறாக எங்களை அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கினார். இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில்ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைந்துசெயற்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் பஸில் ராஜபக்ஷ உட்பட அவரது சகாக்கள் ஜனாதிபதிக்கு பெரும் தடையாகஇருப்பார்கள் பொது ஜனபெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணையுமாறு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எம்மிடம்தொடர்ந்துவலியுறுத்துகிறார்கள். ராஜபக்ஷக்களுடன் அரசியல் ரீதியில் மீண்டும் ஒருபோதும் ஒன்றிணையப் போவதில்லை - என்றார்.

## ஒரு மாதத்துக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றது. இதில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவும் பங்கேற்றிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், மற்றும் புதிதாக வழங்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகமையை வழங்க வுள்ள முதலிரு குழுக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

புதிய நிறுவனங்களின் எரிபொருள் நிலைய முகாமையாளர்கள், விலைச்சூத்திரம், பயன்படுத்தும் இயந்திரம், சந்தைப்படுத்துவதற்கான முறைமைகள், வருமானம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

கலந்துரையாடல் நிறைவடைந்ததும் பிரதான மண்டபத்திலிருந்து வெளியேறிய அமைச்சர் காஞ்சன செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுவதை தவிர்த்துச் சென்றிருதார்.

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவர் தெரிவித்ததாவது,

இலங்கை அரசு புதிதாக மூன்று நிறுவனங்களுடன் எரிபொருளை வழங்குவதற்கான உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளும். அதனை ஒரு மாதகாலத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதில் இருநிறுவனங்கள் தமது செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், அந்நிறுவனங்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவது தொடர்பிலேயே இன்று கலந்துரையாடினோம்.

நிரப்பு நிலையங்களை வழங்கும்போது அவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள், அவர்களுக்குள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். இதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர் - என்றார்.

## சட்டவாட்சி, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமானத் திரட்டல், வரி வசூலிப்பு உள்ளிட்டவை தொடர்பில் இலங்கை மிகவும் பின்னிலையில் உள்ளது.

கொரோனா பரவலுக்கு முன்னதாக இலங்கையின் ஆட்சியாளர்கள் முன்னெடுத்த கொள்கைளில் உள்ளதவறுகளே தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகின்றது. குறிப்பாக, அக் காலத்தில் ஆட்சியாளர்கள் வரிச்சலுகையை வழங்கியுள்ளார்கள்.

இந்த நிலையில், இலங்கையில் மிகவும் உயர் நிலைக்கு சென்ற பணவீக்கத்தை கட்டுப்படுத்த சர்வ தேச நாணய நிதியம் விரும்புகின்றது. இதன் மூலமாக நலிந்தவர்களின் வாழ்வாதாரத்தினை நியாயமான வகையில் பேண முடியும்.

ஆட்சி மற்றும் ஊழல் விவகாரம் குறித்து ஆழமான கண்டறிதலை மேற்கொண்ட முதல் நாடு இலங்கையாக உள்ளது. எனினும் இலங்கை வறியவர்கள் மற்றும் நலிந்தவர்களிற்கு எவ்வாறு உதவவேண்டும் என்பதை மையப்படுத்திய திட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அத்துடன், தனியார் கடன்வழங்குநர்கள் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களை உள்ளடக்கிய கடன்வழங்குநர்களுடன் கடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கானநல்லெண்ண முயற்சிகளை இலங்கை அடுத்தகட்டமாகமேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் இதன் காரணமாக கடன்களை பேண்தகு தன்மை கொண்டமையாக மாற்றியமைப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை பொறுத்தவரை 2022 இல் 8.7 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. இந்த ஆண்டில் இது 3 சதவீதமாகக் காணப்படும். இந்நிலையான சிறியளவிலான மீட்சியை வெளிப்படுத்துவதாக உள்ளது - என்றார்.

## விடைத்தாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு வியாழக்கிழமை பகல் கூடியது. கடந்த இரண்டு மாதங்களாக முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொண்டது.

இது தொடர்பிலல் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் விரிவுரையாளர் சாருதத் இலங்கசிங்க, சுனாமியாக வரும் கடல் அலையானது மீண்டும் கடலுக்குள் சென்றாலும் அது பெரும் அலையாக மீண்டெழும் என்பதை நாம் ஆட்சியாளர்களுக்கு நினைவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளோம். அதனை எதிர்பார்த்திருக்குமாறும் நாம் முற்கூட்டியே தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றார்.

நாம் தற்போது நாட்டு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக எமது போராட்டத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். எமது கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. இருப்பினும்நாம் மதிப்பீட்டுக் கடமையில் ஈடுபடுவதற்குத்தீர்மானித்துள்ளோம். அதனை எப்போது தொடங்குவது என்பது தொடர்பில் ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும் என்று இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர், பேராசிரியர்ஷியாம் பன்னஹெக்க தெரிவித்தார்.

## ஜனாதிபதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகசந்திப்பின்போது, ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடமும், நான்குமாதங்களும்உள்ளன. எனவே, உரிய நேரத்தில் வெற்றி வேட்பாளரை எமது கட்சி பெயரிட்டு - அறிவிக்கும். அந்த வேட்பாளர் பஸில் ராஜபக்சவாகக்கூட இருக்கலாம்.

நாட்டின்தேவைகருதியே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்எமதுகட்சிமுடிவெடுக்கும். - என்றார். (02)

## இன்றும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகியசட்டத்தரணிகள் மக்கள் தரப்பு நியாயங்களை முன்வைத்தன்அடிப்படையில் மல்லாகம்நீதிவான் மன்றநீதிவான்போராட்டம்நடைபெற்ற இடத்திற்கு நேரில் வந்திருந்தார்.

விகாரையின் முகப்பிலோ, அல்லது பாதையிலோ தடைகளை ஏற்படுத்தாது, வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கோ, விகாரையில் இடம்பெறும் உச்சவத்திற்கோ இடையூறு ஏற்படுத்தாமல், அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமலும் ஜனநாயக ரீதியாகப் போராட்டம் நடத்தலாம் என்று அவர் கட்டளை பிறப்பித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்குக் கட்டுப்பட்ட வகையில் அமைதியான முறையில் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தப் போராட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை தொடரும்.

பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினாலேயே இவ்வாறான ஆக்கிரமிப்புகளை கட்டுப்படுத்தவும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கவும் ஆத்துமிறி கட்டப்பட்ட விகாரையை அப்புறப்படுத்தவும் முடியும். இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாரள்கள் அனைவரையும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தையிட்டி விகாரைக்கு முன்பாக உள்ள தனியார் காணியில் இடம்பெறும் அமைதியான போராட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு அழைக்கின்றோம் - என்றுள்ளது.

## காய்ச்சல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹாமாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர். எனவே காய்ச்சல் போன்ற நிலைமைகள் ஏற்படும் போது உடனடியாக வைத்தியர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

இதேவேளைகடந்தஓரிரு வாரங்களாக கொரோனா தொற்றாளர்களும் இனங் காணப்பட்டு வருகின்றனர். ஆசிய நாடுகளான இந்தோனேஷியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் அதிகளவானவர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை குறித்து நாம் வீண் அச்சமடையத் தேவையில்லை. எவ்வாறிருப்பினும் கொரோனா காலத்தில் பின்பற்றிய சுகாதார வழிமுறைகளை தொடர்ந்தும் பேணுவதே ஆரோக்கியமானதாகும்.

குறிப்பாக நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மற்றும் முதியோர் மிக அவதானமாக செயற்பட வேண்டும். இதே போன்று தற்போது எலிக்காய்ச்சல் பரவும் சதவீதமும் அதிகரித்து வருகிறது. இந்த நோய் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களிலேயே அதிகளவில் பதிவாகியுள்ளது. எவ்வாறிருப்பினும் நாட்டின் சகலபகுதிகளிலுமுள்ளமக்கள் தமது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

## 264 கடலட்டைப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுதொடர்புடைய அனைத்துத் திணைக்களங்களும் நேரில் சென்று பார்வையிட்ட பின்பே அனுமதி வழங்கப்படுகின்றது . யாழ். மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களில்எவருமேவெளி மாவட்டத்தவர்கள் கிடையாது. கடலட்டை இனப்பெருக்க நிலையம் ஒன்று அரியாலையில் இயங்கி வருகின்றது. அது வெளியிடத்தைச் சேர்ந்தவருடையது. கடலட்டைப் பண்ணைகள் அனைத்தும் இங்குள்ள கடற்றொழில் சங்கங்களின் அனுமதியுடன்தான் வழங்கப்படுகின்றன. பிரச்சினைக் குரியதாகக் கூறப்படும் கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்" என்றார்.

## இரவில் நட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், இரவில் எழுந்து நடமாடினால் அவர்க ளைக் கைது செய்வோம் என்று பொலிஸார்அறிவித்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று தெரிவித்த பொலிஸார், நடமாடினார் கைது செய்வோம் என்றுமிரட்டினர்என்கின்றனர் போராட்டக்காரர்கள்.

## மஹிந்தவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடும் அனைத்தையும்ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் ஆளும் தரப்பினர் உள்ளார்கள்.

2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக மறந்து விட்டார்கள்.

குறுகியஅரசியல்நோக்கத்துக்காக கொள்கையில்லாமல் செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை நாட்டுமக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் நாட்டுக்கு எதிரான கொள்கைகளை செயற்படுத்துகிறார்.

சர்வதேச நாணய நிதியம் பொருளாதார மீட்சிக்கான இறுதி தீர்வு என்ற நிலைப்பாட்டில் இந்த ஆட்சி செயற்படுகிறது.வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க முன்னர் தேசியக் கடன்களை மறுசீரமைக்கஆட்சியாளர்கள் அவதானம்செலுத்தியுள்ளனர்.

அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தபோவதில்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த பொது ஜன பெரமுனவினர் இன்றுகொள்கைக்குமுரணாக செயற்படுகிறார்கள்.

இலங்கை மின்சார சபை,பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார்லைன், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் என இந்த ஆட்சி குறிப்பிடுகிறது.

நட்டமடையும்அரசநிறுவனங்களுடன் இணைத்து 52 அரச நிறுவனங்களையும் மறுசீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.52 அரச நிறுவனங்களின் பெயர்,சொத்து மதிப்பு தொடர்பில் முழுமையான தகவல்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சிடம் பலமுறை வலியுறுத்தினோம்.ஆனால் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும்ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக் தனதுநிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மக்களாணை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் கொள்கைக்கு எதிரானது என்பதை ஆளும் தரப்பினர்நினைவில்வைத்துக் கொள்ளவேண்டும்.

மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் 'உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு' சட்டமூலத்தை மின்சாரத் துறை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்தச் சட்டமூலத்தின் பல பரிந்துரைகளில் 1976 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சிலோன்மின்சாரசபைசட்டம், 2009ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க சிறிலங்கா மின்சார சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க சூரிய வளங்கள் பயன்பாட்டு சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின் திருத்தச் சட்டங்கள் ஆகிய சட்டங்களை முழுமையாக இரத்துசெய்யும்யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு பிரதான நகரங்களிலுள்ள வெசாக் வலயங்களுக்கு வருகை தரும் பக்தர்களினதும் பொது மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேலதிக பொலிஸ் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அதற்கிணங்க, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், நேரில் சோதனை செய்வதற்கும் மேலதிக அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வெசாக் விடுமுறைகாலம் முழுவதும் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் சிவிலியன்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துமாறு பொலிஸ் தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வெசாக்கை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து மது பான விற்பனை நிலையங்களும் நேற்று முதல் மே மாதம் 6 ஆம் திகதி வரை மூடப்படுகிறது.

சில்லறை விற்பனை நிலையங்கள் உட்பட அனைத்து உரிமம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களும் நேற்று முதல் மூன்று நாள்களுக்கு மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்று நாள்களில் மதுக் கடை உரிமையாளர்கள் தங்கள் கடைகளை மூடாமல் இருந்தால் அல்லது உரிம விதி முறைகளை மீறினால் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு அனைத்து கலால் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், வெசாக் போயா விடுமுறையை முன்னிட்டு, விசேட போக்குவரத்து சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று மற்றும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆகிய தினங்களில் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் இதிபொலகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முதல் விசேட பஸ் சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வெளி மாகாணங்களுக்கும் வெளி மாகாணங்களில் இருந்து கொழும்புக்கும் இந்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டா தெரிவித்தார்.

மேலும், வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, நாளையும் நாளை மறுதினமும் இந்த வாய்ப்பு வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளின் உறவினர்களின் மூலம் அவர்களின் வீடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் உணவுப்பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை ஒருவருக்கு போதுமான அளவில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உறவினர்களைப் பார்வையிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இம்முறை வெசாக் பண்டிகையை முன்னிட்டு, கொழும்பு நகரில் 6 வெசாக் வலயங்களும் 125 பதிவுசெய்யப்பட்ட தான சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபை, புத்தசாசன அமைச்சு, பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் இணைந்து கொழும்பு நகரம் மற்றும் புத்தி ரஷ்மி வெசாக் வலயம், வலுகாராமய வெசாக் வலயம் முழுவதும் விசேட வெசாக் பூஜோத்சவ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளன.

பௌத்தலோக மாவத்தை வெசாக் வலயம், புர ஹல வெசாக் வலயம், துறை முக அதிகாரசபையைச் சுற்றியுள்ள வெசாக் வலயம் மற்றும் சுதந்திர சதுக்கத்தைச் சுற்றியுள்ள வெசாக் வலயம் என 6 வெசாக் வலயங்கள் கொழும்பு நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, காலி முகத்திடல் பகுதியில் மாபெரும் வெசாக் வலயமும், தான சாலையும் அமைக்கப்பட்டுள்ளதோடு, அனைத்து வெசாக் வலயங்களிலும் பொது மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் சபையுடன் இணைந்து நீர்த்தாங்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஏறாவூரில் போதைக்கு எதிரான பரப்புரை







(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஏறாவூர் நகர பிரதேச செயலகம், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸார் ஆகியோர் இணைந்து நடத்திய போதைக்கு எதிரான சுவரொட்டி பரப்புரையும், துண்டுப் பிரசுர விநியோக நிகழ்வும் புதன்கிழமை ஏறாவூர் பொலிஸ் நிலைய சந்தியில் இடம்பெற்றது.

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் உட்பட மாவட்ட, பிரதேச செயலக அதிகாரிகள் இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இதமளி ஆதரவு மையத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1926 பொறிக்கப்பட்டு, போதைக்கு எதிரான வாசகங்கள் உள்ளடங்கிய ஸ்டிக்கர்கள் பிரதேச பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன், வீதிகளில் பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

இத்திட்டம் யாழ்ப்பாண மாவட்ட மருத்துவபீட பழைய மாணவர் சங்க நிதி அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.





# தனுஷ்க குணதிலக மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து தாமதமாகி வருவதால், நியூ சவுத் வேல்ஸ் சட்ட அதிகாரிகள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும் என அவரது வழக்கறிஞர்கள் வாதிட்டுள்ளனர்.

சிட்னி நீதிமன்றில் நேற்று (புதன்கிழமை) மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிரதிவாதியான தனுஷ்க குணதிலக்கவின் சட்டத்தரணிகள் இந்த வாதத்தை முன்வைத்துள்ளனர்.

வெளிநாட்டுப் பிரஜையான தனுஷ்க குணதிலக அவுஸ்திரேலியாவில் வழக்கு விசாணையில் ஈடுபட்டு சுமார் 6 மாதங்கள் கடந்த விட்டதாகவும் இந்த தாமதங்களினால் பெரும் தொகையை செலவிட நேரிட்டு வருவதாகவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்படி, அடுத்த நீதிமன்ற அமர்வில், உரிய நீதிமன்ற கட்டணத்தை நியூ சவுத் வேல்ஸ் சட்ட அதிகாரிகளே செலுத்த வேண்டும் என்ற பிரேரணையை முன்வைக்கத் தயாராகி வருகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற ரி 20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்க வந்த தனுஷ்க குணதிலக்க, சிட்னியில் யுவதி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி தவறி வெடித்ததில் கொன்ஸ்டபிளுக்குக் காயம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு, மே 05

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கைத்துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தார். புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கொன்ஸ்டபிள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கொன்ஸ்டபிள் ஒருவர் வீதிச் சுற்றுக் காவல் கடமைக்குச் சென்றபோது அவருக்குக் கைத்துப்பாக்கி வழங்கப்பட்டிருந்தது.

அவர் சம்பவதினம் அதிகாலை 3 மணிக்கு கடமையை முடித்துக்கொண்டு அந்த கைத்துப்பாக்கியை ஆயுத களஞ்சியப் பொறுப்பாளரிடம் வழங்க முற்பட்டபோது தவறி கைத்துப்பாக்கி வெடித்தது.

இதனால் களஞ்சிய பொறுப்பாளரான பொலிஸ் கொன்ஸ்டபிளின் காலை துப்பாக்கிக் குண்டு பதம் பார்த்தது. காயமடைந்த நிலையில் அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸாருக்கு மிரட்டல்; இருவருக்கு விளக்கமறியல்

கோப்பாய்ப் பொலிஸாருக்கு வீதியில் வைத்து கிறீஸ் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திவிட்டுத் தப்பிச் சென்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட, ஆவா வினோதன் மற்றும் மல்லாகம் ரஞ்சித் ஆகியோர் பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உரும்பிராய் சந்நியில் கடந்த வாரம் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர்.

அப்போது கிறீஸ் கத்தியைக் காண்பித்து மிரட்டிவிட்டு இருவர் தப்பிச் சென்றனர். மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டே தப்பி ஓடினர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் வியாழக்கிழமை தமது சட்டத்தரணி விசுவலிங்கம் திருக்குமரன் ஊடாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். இருவரையும் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

சந்தேக நபர்கள் இருவர் சார்பிலும் பிணை விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது. அதனை நிராகரித்த மன்று இருவரையும் மே 17 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

# கஞ்சாவுடன் இருவர் கைது



கஞ்சாப் போதைப் பொருளை வைத்திருந்த இருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்றறு சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்படும்போது 37.10 கிராம் கஞ்சாவை இவர்கள் இருவரும் உடமையில் வைத்திருந்துள்ளனனர். இருவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சாவகச்சேரி மதுவரி நிலைய மதுவரிப் பரிசோதகர் ரஷிகரன் தலைமையிலான குழுவினரே இவர்கள் இருவரையும் கைது செய்தனர். இருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் மே 16 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்றாவது ஞானம் கிடைக்கட்டும்

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தின் பௌர்ணமி தினத்தில் பௌத்தர்களால் புத்த பூர்ணிமா கொண்டாடப்படும். கௌதம புத்தர் (Gautama Buddha) அவதரித்த, ஞானம் பெற்ற, பரி நிர்வாணம் (இறந்த) அடைந்த வைகாசி மாதம் பௌர்ணமி தினத்தை புத்த பூர்ணிமா, புத்த ஜெயந்தி அல்லது வெசாக் எனப் பல பெயரிட்டு அழைக்கிறார்கள்.

இலங்கையும் இந்த நாளில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை முன்னிறுத்தி புத்த பூர்ணிமாவைக் கொண்டாடுகின்றது. இதற்கென சிங்களப் பகுதிகளில் மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொரோனா, பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்குப் பின்னர் இந்தத் தடவை வெசாக் கொண்டாட்டங்கள் மீண்டும் களைகட்டியிருக்கின்றன.

பலவித சமய நிகழ்வுகள் இந்நாளில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை முன்னிறுத்தி இடம்பெறும். இக்காலப்பகுதியில் பந்தல்கள், தோரணங்கள், ஒளிக்கூடுகள் கட்டப்பட்டு எங்கும் விழாக்கோலம் இருக்கும். தம்மை இரட்சிக்க வந்த மீட்பராக இந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள் கொண்டாடும் புனிதரைத் தமது ஆக்கிரமிப்பாளராக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் கருதுகின்ற நிலைமை இருப்பது மிக வருந்தத்தக்க செயல். அதிலும் இந்த ஆக்கிரமிப்பை புத்தரின் வழித் தோன்றல்களான பிக்குகளே முன்னின்று செயற்படுத்துவது அதைவிடவும் மோசமானது.

புத்த பூர்ணிமா என்பது புத்தருக்கு ஞானம் கிடைத்த நாள் என்று நம்பப்படுகிறது. இந்த நாளில்தான் அவர் பிறந்தார் என்றும், இறந்தார் என்றும் கருதப்படுகிறது. ஆனால், புத்தரை வழிபடுபவர்களுக்கு இரண்டாயிரத்து 500 வருடங்களுக்குப் பின்னரும் ஞானம் கிடைக்கவில்லை என்பதும், புத்தர் போதித்த கொள்கைகளுக்கு மாறாக அடக்குமுறை, ஆக்கிரமிப்பு, மற்றைய இனத்தவரைத் துன்புறுத்துவது என்பவற்றைத் தொடர்வது புத்தரையே அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்து மதத்தில் பிறந்தவரான புத்தர், இந்து மதத்தைவிடவும் தீவிரமான அறக் கருத்துக்களைப் பரப்பியவர். ஆசையே மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதை உணர்ந்து, உணர்த்தியவர். அப்படிப்பட்டவரின் பெயரால் நிகழும் அடக்குமுறையால் இன்று மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள், துன்பப்படுகிறார்கள். புத்தரின் விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறார்கள். ஆசைகளைத் துறந்த, ஆசைகளைத் துறக்கச் சொன்ன புத்தரின் கொள்கைகளைப் பின்பற்றும் பிக்குகள் மண்பற்றும் மதப் பற்றும் நிறைந்தவர்களாக இருப்பதைக்கூடச் சகித்துக் கொள்ள முடிகின்றது. ஆனால் அவர்கள் மற்றைய இனங்களை அடக்கி ஒடுக்க விரும்புபவர்களாக, இருப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

புத்தர் பஞ்சசீலம் எனப்படும் ஐவகை ஒழுக்கத்தைத் தனது துறவிகளுக்கும் இல்லறத்தாருக்கும் வகுத்தார். கொல்லாமை, திருடாமை, காமவெறியின்மை, பொய்யாமை, குடியாமை என்பவற்றையே அவர் சுய ஒழுக்கமாக வரையறுத்தார். இன்று அவற்றையெல்லாம் மறந்துதான் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் புத்தரின் பெயரால் முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்தையும் துறந்த ஒரு மாமுனியை ஆக்கிரமிப்பாளனாகத் தமிழர்களின் முன்பாக நிறுத்தியமையையிட்டு அதனைச் செய்யும் துறவிகள் வெட்கித் தலைகுனியவேண்டும். இந்தப் புத்த பூர்ணிமா தினத்திலாவது அவர்களுக்கும் ஞானம் கிடைக்க புத்தர் அருள் வழங்கட்டும்.

## ஆசிரியர் மீது போலி குற்றச்சாட்டு பாடசாலைச் சமூகம் போராட்டம்







வவுனியா-தரணிக்குளம் கணேசுவரா வித்தியாலயத்தின் தமிழ்பாட ஆசிரியர் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வரும் போலியான தகவலுக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) காலை பாடசாலைக்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள் -

எமது பாடசாலையின் தமிழ்பாட ஆசிரியரான திருமகன் மீது அண்மை காலமாக தவறான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலே பதியப்பட்டு வருகின்றன.

அதற்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் சமூகத்திற்கு ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தட்டி கேட்டதற்காக இழிவான முறையில் அவர் பழி வாங்கப்பட்டு கொண்டிருக்கின்றார்.

அந்த விடயத்தை பாடசாலை சமூகம் சார்பாக வன்மையாக கண்டிப்பதோடு, குறித்த நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைக்க வேண்டிய கட்டாய நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

ஒரு தகவலின் உண்மைத் தன்மை தொடர்பாக ஆராயாமல், அதனை பலரும் பகிர்வு செய்தமையானது மோசமான ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே இனியாவது உண்மை தன்மையினை உணர்ந்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றனர்.

எமது திருமகன் ஆசிரியருக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடு, நீதியை நிலை நாட்டு, அவதூறு வார்த்தை பேசாதே, ஆசிரியர்களை பாதுகார், உண்மையை மட்டும் பதிவிடு, ஆசிரியர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காதே போன்ற வாசகங்களையுடைய பதாதைகளை தாங்கி போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பொலிஸ் பஸ் டீசல் திருடி விற்பனை சாரதியான கான்ஸ்டபிள் கைதானார்

பொலிஸ் பஸ் ஒன்றின் சாரதி ஒருவர், 11 லீற்றர் டீசலை பஸ்ஸிலிருந்து எடுத்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ பணிகளுக்காக பொலிஸ் குழுவொன்றை கொழும்பு பகுதிக்கு அழைத்துச்சென்றபோது, அதன் சாரதியான கான்ஸ்டபிள் மொரகல்ல சுற்றுலா பொலிஸ் நிலையத்துக்கு சற்று தொலைவில் உள்ள தனியார் இடத்தில் பஸ்ஸை நிறுத்தி, அதிலிருந்த டீசலை எடுத்து விற்பனை செய்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஹபராதுவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 32 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அரசாங்க சொத்துக்களை அபகரித்த குற்றச்சாட்டின் கீழ் கைதான சந்தேகத்துக்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

## ஊடகவியலாளர் தவசீலன் மீதான வழக்கு கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை



முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் அதிகாரி தொடர்ந்த வழக்கானது கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு நீதிவான் நீதி மன்றில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றது.

இதன் போது வழக்கு தொடுனரான கடற்படை புலாய்வாளருக்குஅழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 2023.09.21க்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஊடகவியலாளர் முல்லைத்தீவு பொலிஸாரால் 20.04.2019 கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக வழக்கு இடம் பெற்று வரும் நிலையில் மேற் படி வழக்கு நேற்று தவணையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டபோது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.எஸ். தஞ்சயன் முன்னிலையாகியிருந்தார். இதன்போது வழக்கு தொடுனரான முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி வருகைதராத நிலையில் வழக்கு தொடுனரான கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது .

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன் போது செல்வபுரம் பேரூந்து தரிப்பு நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் போராட்டகாரர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்தவேளை அவரை ஆர்ப்பாட்ட காரர்கள் அடையாளப் படுத்த முற்பட்ட வேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என்று வினவியபோது அதற்கு அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டகாரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து முல்லைத்தீவு பொலிசாரை சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமான நிலையில் குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படையினை சேர்ந்தவரா என அடையாளப்படுத்திய போது கடற்படையினர் அவர் தங்களுடைய நபர் என தெரிவித்த போது அவரை குறித்த இடத்தில் வருகைதந்த பொலிசாரிடம் ஒப்படைத்து திரும்பியுள்ளார்.

இந்நிலையினை தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களை பழிவாங்கும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸ் நிலை யத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடந்தும் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிட்ட பின்னர் பேச்சுக்கு அழையுங்கள்

## விந்தன் கனகரத்தினம் கோரிக்கை

தமிழர்களுக்கு எதிரான அராஜகங்களை புரிந்து கொண்டு பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்த முடியாது என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடகஅமையத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களைசந்தித்தபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

தையிட்டி பகுதியிலே ஒரு பிரமாண்டமான புத்த விகாரை இராணுவத்தினருடையஉதவியுடன்கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாறான பல்வேறு அத்துமீறல்களை அரச படைகளும், அரசும் தொடர்ந்து வண்ணமே உள்ளன. இந்தலட்சணத்திலே இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம்கொண்டஜனாதிபதியாக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க அண்மையிலே வவுனியாவில் தமிழ் கட்சிகளுடன் பேசி இனப் பிரச்சினைகளை தீர்ப்போம் என்றார்.

இந்த சூழ்நிலையிலே நாங்கள் ஜனாதிபதியை நோக்கிதமிழ்மக்கள்சார்பிலே சொல்லக்கூடியது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற பௌத்தமயமாக்கல், சிங்கள குடியேற்றங்கள் என்பவற்றை உடனடியாக உங்களால் தடுத்து நிறுத்த முடியும்.

அதனை செய்யாது, எங்கள் நிலங்களை ஆக்கிரமித்து, எங்களை அழித்து கொண்டு எங்கள் கலாசாரத்தை, எங்கள் இருப்புக்களை இல்லாமல் செய்து கொண்டு மறுபுறமே இவ்வாறான கோரிக்கைகளை விடுகின்றீர்கள்.

தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிட்டு இனப்பிரச்சினை தொடர்பில் பேச அழையுங்கள். - எனத் தெரிவித்துள்ளார்.

## சவூதிக்கு பணிப்பெண்ணாக சென்று

# துன்புறுத்தல்களுக்கு உள்ளான பழங்குடியின இளம் பெண்கள்!

கொழும்பு, மே 05

சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்கொண்ட பழங்குடியின இளம் பெண் ஒருவர் புதன்கிழமை இலங்கை திரும்பினார்.

மஹியங்கனை, தம்பனை, குருகும்புர கிராமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஸ்வர்ணா மல்காந்தி என்ற யுவதியே இவ்வாறு நாடு திரும்பியவராவார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, அவர் தனது கிராமத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் சவூதி அரேபியா சென்று பணிப்பெண்ணாக பணிபுரிந்துள்ளார்.

இந்நிலையில், கட்டுநாயக்க வந்தடைந்த குறித்த பெண் தெரிவிக்கையில்,

நான் அதிகாலையில் எழுந்து இரவுவரை வேலைசெய்வேன். அந்த வீட்டுப் பெண் மிகவும் கண்டிப்பானவர். அவர் எப்போதும் விரைவாக வேலை செய்ய வேண்டும் என என்னிடம் கூறுவார்.


அந்த மேடம் என்னை அடிக்கடி அடிப்பார். எப்போதும் உதைப்பார். என் தலைமுடியைப் பிடித்து இழுத்து தரையில் தள்ளிவிடுவார். கடந்த நோன்புப் பெருநாள் தினத்தில் மேலும் இரண்டு வீடுகளில் நான் வேலை பார்க்க நேர்ந்தது.

இதற்கிடையில், நான் மேடத்தின் அம்மா வீட்டில் வேலை செய்ய வேண்டியிருந்தது. அப்போது அவரது சகோதரர் எனக்கு பல்வேறு துன்புறுத்தல்களைச் செய்தார்.

ஐந்து முறை நான் சுயநினைவை இழந்தேன். அந்தச் சந்தர்ப்பங்களில் அவர் என்னிடமிருந்து தனது தேவைகளை பூர்த்தி செய்துள்ளார். - என்று கூறியுள்ளார்.




# விதிகளை மீறி விற்கப்படவிருந்த அழகுசாதனப் பொருட்கள் சிக்கின



இறக்குமதியாளர்மற்றும் உற்பத்திநிறுவனத்தின்பெயர் குறிப்பிடப்படாமல் வைக்கப்பட்டிருந்த அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்ட பல உற்பத்திகளை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு - புறக்கோட்டை கதிரேசன் வீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த உற்பத்திப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட அழகுசாதனப் பொருட்களின் பெறுமதி சுமார் 3 கோடி ரூபா என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குறித்த உற்பத்திகள், வெளநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறி சந்தையில் விற்பனை செய்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருள்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (02)

# வடக்கு ஆளுநர் ஜீவனின் உத்தரவை உதாசீனம்செய்த வவுனியா அரச அதிபர்



வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் உத்தரவைவவுனியாமாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர உதாசீனம்செய்தசம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வவுனியாவில் இடம் பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய் இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்துக்கு வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கூட்டம் முடிந்தபின் 4.30 இற்கு ஊடக சந்திப்பு நடைபெறும் என மேலதிக மாவட்ட அரச அதிபர் தி.திரேஸ்குமாரால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாலை 4 மணியில் இருந்து மாலை 6 மணி வரை மண்டப வாயிலில் காத்திருந்த ஊடகவியலாளர்கள் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இடைநடுவில் வெளியேறிய வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிடம் ஊடகசுதந்திர நாளான இன்று எம்மை ஏன் மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு அனுமதிக்கவில்லை எனக் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த ஆளுநர், நீங்கள் கூட்ட மண்டபத்திற்குள் வரவில்லையா. உங்களை அனுமதிக்கவில்லை என எனக்கு தெரியாது. மன்னித்துக் கொள்ளுங்கள். யார் வர வேண்டாம் என கூறியது என ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பிய அவர் நீங்கள் மண்டபத்திநற்கு செல்லுங்கள். நான் சொன்னதாக அரச அதிபரிடம் சொல்லுங்கள் எனக் கூறி அங்கு நின்ற இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானிடமும், பிரதிநிதிகளிடமும், அரச அதிபரிடமும் தெரியப்படுத்துமாறு கூறிவிட்டுச் சென்றிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதிகள் குறித்த விடயத்தை அரச அதிபரிடம் தெரியப்படுத்தியும், ஆளுநரின் உத்தரவை கருத்தில் எடுக்காது கதவுகளை மூடி ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

# தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது!

குருணாகலில் முன்னாள் பொலிஸ் அதிகாரியால் முன்னெடுக்கப்பட்ட தகாத தொழில் நடவடிக்கை பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

தங்கும்அறைகளைவாடகைக்கு விடுவதாகக் கூறி, இந்தத் தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு ஆண்களுடன்தகாததொழில் ஈடுபட்ட ஆறு யுவதிகளையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளர்.

குருணாகல், கண்டி வீதியில் கட்டுவான சந்திக்கு அருகில் தங்குமிடம் என்ற போர்வையில் இந்த தகாத விடுதி நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தங்கியிருந்த அறையை சோதனையிட்டபோது, ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

விபசாரத்தில் ஈடுபடும் யுவதிகள் இந்தப் போதைப் பொருள்களை பயன்படுத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம்வெளியிட்டுள்ளனர்.

# இந்த ஆண்டின் முதல் சந்திரகிரகணம் இன்று

இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் இன்று (வெள்ளிக்கிழமை) சித்திரா பௌர்ணமியன்று ஏற்படும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த சந்திர கிரகணம் இலங்கை நேரப்படி இன்று இரவு 8.44 மணிக்கு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை 1.01 மணிக்கு நிறைவடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இந்த சந்திர கிரகணத்தை வெற்றுக் கண்ணால் பார்ப்பது மிகவும் கடினம்.

ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, பசுபிக், அட்லாண்டிக், இந்தியப் பெருங்கடல் மற்றும் அண்டார்டிகா ஆகிய கண்டங்களில் இந்த சந்திர கிரகணங்கள் தெரியும் என்றும் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# திருக்குறள் கூறும் அறக்கருத்துக்கள்



மனிதனை நல்வாழ்வு வாழவைக்க உதவும்வகையில் பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன .வாழ்க்கையை எவ்வாறு வாழவேண்டும், குற்றம் ஏற்படாமல் தடுக்கும் முறைகள், அக்குற்றத்தை நீக்குதல், தவறுகளைத் திருத்துதல் என பல வழிமுறைகளை இலக்கியங்கள் எமக்குக் காண்பிக்கின்றன. இவற்றுடன் விழுமியப்பண்புகள் பலவற்றையும் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சங்ககாலம் (கி.பி. 1–3 ஆம்நூற்றாண்டு) தற்காலம் வரை பல இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்ற அதேவேளை வாழ்கையை வழிப்படுத்தும் குருவாகவும் விளங்குகின்றன. இதனால்தான் 'ஒரு சிறந்த நூல் ஒரு நல்ல நண்பனுக்கு சமனானது' என்று கூறுவார்கள். இவ்வாறு வாழ்வை வழிப்படுத்தும் நூல்களாக புறநானூறு, நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், இனியவை நாற்பது, இன்னா நாற்பது என பலவற்றைக் கூறலாம். இந்தவகையில் இவற்றுள் சிறந்த நூலாகவும் எக்காலத்துக்கும் பொருந்தும் நூலாகவும் திருக்குறள் விளங்குகிறது. உலகப் பொதுமறை எனப்படும் இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று 3 பிரிவுகள் ஊடாக அறத்தை உணர்த்துகிறது. திருக்குறள் கூறும் கருத்துக்கள் குறித்து பின்வருமாறு நோக்கலாம்.

திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறளில் பொருட்பாலில் அறிவுடைமை எனும் அதிகாரம் காணப்படுகிறது. இந்த அதிகாரத்தில் எமது மனதை அதன்போக்கில் செல்லவிடாது அதைக் கட்டப்படுத்த வேண்டும். எனக் கூறப்படுகிறது. இதனை,

'சென்ற இடத்தாற் செலவிடாது தீதொருகி
நன்றின்பால் உய்ப்பது அறிவு'

என வள்ளுவர் கூறுகிறார். இவாவாறாக மனதை ஒருவன் கட்டுப்படுத்தினால் அவனிற்குகக் கிடைக்காத அரிய பொருள் எதுவும் இல்லை என வள்ளுவர் கூறுகிறார். இவ்வாறு மனதைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தாலேயே தற்கால சமூகத்தில் பலர் பலவகையான குற்றங்களைச் செய்து உறவுகள், உடைமைகள் என அனைத்தையும் இழந்துவிட்டு அறிவற்ற பேதைகளாக விளங்குகின்றனர்.

பொய்யாமொழிப்புலவரால் கூறப்பட்ட அறக்கருத்துக்களை தாங்கிய திருக்குறளில் குற்றங்கடிதல் எனும் அதிகாரத்தில் குற்றங்களைச் செய்யாமல் விட்டால் ஏற்படும் நன்மைகள் பற்றி குறிப்பாகக் கூறப்படுகிறது. வள்ளுவப்பெருமான் செருக்கு, சினம், சிறுமை, மாட்சிமை இல்லாதமனம், மட்டற்ற மகிழ்ச்சி, உலோபத் தனம் என்பவற்றை குற்றங்கள் எனக் கூறுகிறார். இவற்றை நீக்கிக்கொண்டால் வாழ்வு சிறப்பானதாக அமையும் என்கிறார். குற்றம் அழிவைத்தரும் பகை எனக்கூறி எம்மைக் குற்றங்களில் இருந்து விலக்க முயல்கிறார். இதனை,

'குற்றமே காக்கப்பொருளாக குற்றமே
அற்றம் தரூஉம் பகை'

எனக்கூறுகிறார். மேலும் குற்றத்தால் ஏற்படும் விளைவுகள், குற்றம் வராமல் தடுக்கும் வழிமுறைகள் என்பவற்றையும் கூறுகிறார். ஒருவன் தன்னுடைய குற்றங்களை நீக்கிய பின்னரே பிறரது குற்றங்களை நீக்க முற்பட வேண்டும். இதனை,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றமாகும் இறைக்கு'

என்ற குறட்பா விளக்குகிறது. இவ்வாறாக தன்னிடத்தில் குற்றத்தை வைத்துக்கொண்டு பிறரைக் குற்றம் சொல்லும் கீழ்த்தரமான சமூகமே இன்று காணப்படுகிறது. இவ்வாறான வகையில் இவ்வதிகாரம் அறக்கருத்துக்களைக் கூறுவதைக் காணலாம்.

மேலும் ஒருவன் ஒரு செயலைச் செய்யும் போது அதனால் விளையும் விளைவுகளைத் தனக்குத் துணையான இனத்துடன் கலந்துரையாடிச் செய்யவேண்டும் எனக்கூறுகிறார். இதனை,

'தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணச்; செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்'

என்கிறார். வள்ளுவர். இவ்வாறு ஒரு செயலை ஆராயமால் செய்வதன் காரணமாகவே தற்காலத்தில் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. மேலும் ஒருவன் ஒரு செயலை ஆராய்ந்து செய்தால் அதன் பின் வரும் எவ்வளவு பெரிய பிரச்சினையையும் எதிர்கொள்ள முடியும் எனக் கூறப்படுகின்றது. இதனைத் தெரிந்து செயல்வகை எனும் அதிகாரத்தின் ஊடாக எம்மால் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வள்ளுவர் விளக்கியுள்ளார்.

மேலும் நாம் ஒரு விடயத்தைச் செய்யமுன் எம்மிடம் உள்ள பொருளின் அளவினை அறியவேண்டும். அதாவது கொடை வழங்கும்போது எம்மால் முடிந்த அளவே கொடை வழங்க வேண்டும். இவ்வாறு பொருட் செல்வத்தின் அளவறிந்து ஈதல் அந்தப்பொருளைப் போற்றும் மரபாகும் என வள்ளுவர் கூறுகிறார். இதனை

'ஆற்றின் அளவறிந்து ஈக அப்பொருள்
போற்றி வழங்கு நெறி'

என்ற குறளின் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு அளவறியாமல் வாரி வழங்கி அழிவடைந்த பலரை நாம் எம் சமுதாயத்தில் காண்கிறோம்.

நாம் ஒரு விடயத்தில் வெற்றி கொள்ள எமக்குத் துணையாக சரியான இனத்தைத் தெரிவு செய்யவேண்டும். ஏனெனில் ஒருவன் சேருகின்ற இனத்தை அடிப்படையாகக் கொண்டே அவனின் இயல்புகள் தீர்மானிக்கப்படுகிறது. எனவே தெரிந்த சரியான இனத்தோடு நட்புக்கொள்ள வேண்டும். இதனை,

'நிலத்தின் இயல்பால் நீர்திரிந்து அற்றாகும்
மாந்தர்க்கு இனத்து இயல்பதாகும் அறிவு'

எனும் குறள், விளக்குகிறது. நாம் மனதளவில் எந்தக்குற்றமும் செய்யவில்லை என எமக்குத் தெரியும். ஆனால் எம்மைப் பார்ப்பவர்கள் எம்மினத்தை (நண்பர்களை) அடிப்படையாகக் கொண்டே எம்மை இனங்காணுகின்றனர். இதனை,

'மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்'

என்ற குறள்பா விளக்குகின்றது. இவ்வாறாக தவறான இனத்துடன் சேர்வதால் பல பிரச்சினைகள் உருவாகி குடும்பத்தவரே விலக்கி வைக்கும் மோசமான நபர்களைக் கொண்ட சமூக்தில் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இலங்கையில் தற்போது நிகழும் போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டுக்கள் என்ற குற்றங்களுக்குத் தவறான சேர்க்கையே காரணமாக அமைகின்றது. இவர்வாறான தவறான சேர்க்கை காரணமாக நல்ல மனிதனின் வாழ்க்கையும் நல்ல சமூகத்தின் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. இதனை உணர்த்தும் வகையிலேயே திருக்குறள் ஊடாக திருவள்ளுவர் இனத்தின் முக்கியத்துவத்தை சிற்றினம் சேராமை எனும் அதிகாரத்தின் ஊடாக விளக்குகிறார்.

திருவள்ளுவரை நாம் ஞானி என்றே கூறவேண்டும். ஏனெனில் எல்லாக் காலத்திற்கும் உகந்ததான ஒரு நூலை வழங்கியுள்ளார். மேலும் எல்லா மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு 'உலகப்பொது மறை' என அழைக்கப்படும் இந்நூலில் என்றும் பொய்யாகாத கருத்துக்களைக் கூறியதால் இவர் பொய்யாமொழிப்புலவர் எனவும் அழைக்கப்படுகின்றார். ஒழுக்கம், கல்வி, நன்றிமறவாமை, சிற்றினம் சோராமை, அறிவுடைமை எனப்பல கருத்துக்களைக் கூறுவதால் இந்நூல் இன்றும் சிறப்புவாய்ந்ததாக விளங்குகிகறது. எந்தவொரு மேடைப்பேச்சாக இருந்தாலும் சரி கட்டுரையாக இருந்தாலும் சரி திருக்குறள் இல்லாத போது அது உப்பில்லாப் பண்டம் போல ஆகிவிடும். பொதுவாக எம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்கள் பற்றி திருக்குறள் சிறப்பாகக் கூறுகிறது.

ஒருவன் ஒரு விடயத்தைத்தேடி அறிய கல்வி உதவுகிறது. இத்தகைய கல்வியை வள்ளுவர் வலியுறுத்துகிறார். கல்வியானது கள்வர்களால் கொள்ளையிட முடியாத ஒரு விடயம் எனவும் என்றும் அழியாத ஒரு விடயமாகவும் உள்ளது எனக்கூறுகிறார். இவ்வாறான கல்வியைக் கற்றபின் நல்ல வழியில் நல்ல மதிப்புடைய பெரியவர்களை மதிக்கவேண்டும் எனக்கூறுகிறார். இவ்வாறு மதிக்காத கல்வியில் பயனில்லை என்கிறார். இதனை,

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஎனின்'

என வள்ளுவர் கூறுகிறார். கற்ற விடயங்களைப் பிறரிடம் கூறி பிறரையும் நல்வழியில் வழிப்படுத்த வேண்டும். இவ்வாறு வழிப்படுத்தினால் எம்வாழ்வும் சமூகத்தின் வாழ்வும் சிறப்பாக அமையும்.

ஒருவன் வாழ்க்கையில் வெற்றிபெற முயற்சி இன்றியமையாததாக விளங்குகின்றது. இந்த முயற்சியால் ஆகாதது எதுவும் இல்லை. தெய்வத்தால் முடியாத விடயத்தைக் கூட முயற்சியால் சாதிக்க முடியும் என்கிறார். இதனை,

'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்த கூலி தரும்'

என்ற குறள் விளக்கி நிற்கிறது. இவைதவிர 'முயற்சி திருவினையாக்கும்' எனப்பல பழமொழிகளும் முயற்சியின் பெருமையை உணர்த்துகின்றன. இவ்வாறான முயற்சி இல்லாத காரணத்தால் தான் எம்நாடு இன்றும் அபிவிருத்தி அடையாமல் காணப்படுகிறது.

முயற்சி செய்யும் போது அதனைக் கூட்டாகவும் ஒற்றுமையுடனும் செய்யவேண்டும். இதனையே வள்ளுவர் மிகவும் பலமான ஆயுதமாகக் கூறுகிறார். நல்லவர்களைத் துணையாகக் கொண்டு செயற்படுபவனுக்கு ஒருபோதும் துன்பம் இல்லை இதனை,

'தக்கா ரினத்தனாய் தானொழுக வல்லானை
செற்றார் செயற்கிடந்த தில்'

என்ற குறள் விளக்குகிறது. இவ்வாறான துணையைத் தெரிவு செய்து செயற்படாவிடின் அழிப்பதற்குப் பகைவர் இல்லாமலே அழிந்துவிடுவோம். என்கிறார். இதனை,

'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.'

என்ற குறள் விளக்குகிறது. எனவே நாம் எந்த விடயத்தைச் செய்யும் போதும் எம்மோடு கலந்து ஆலோசிக்க ஒரு சரியான நபர் வேண்டும்.

இவ்வாறாக பல அதிகாரங்கள் ஊடாக எம் வாழ்வை வளமாக்க திருக்குறள் முயற்சி செய்கிறது. எந்த விடயத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டும். என்பதை

'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'

என்ற குறள் விளக்குகிறது. நன்றி மறவாமை என்பது ஒரு போற்றத்தகு அறமாக விளங்குகிறது. இதனையே வள்ளுவர்

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்கிறார். அதாவது ஒருவர் செய்த நன்றியை மறத்தல் என்பது தலைசிறந்த குற்றமாகும் எனக் கூறுகிறார். தற்போதைய சமூகம் நன்றிமறந்த சமூகமாகவெ காணப்படுகிறது. இவ்வாறு பல அறக்கருத்துக்களைக் கூறி திருக்குறள் ஊடாக வள்ளுவர் எம்மை வழிப்படுத்த முயல்கிறார்.

'நாய்வாலை நிமிர்த்த முடியாது' எனக்கூறுவார்கள். அதுபோல் எவ்வளவு குற்றச்செயல்கள் நடந்தாலும் நாம் மாறப்போவது இல்லை பாரதியார் கூறியபடி 'சின்னஞ்சிறு கதைகள் பேசிக்கொண்டு திரியும் சாதாரண மானிடர்' போலவே நாமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். மனிதனை வளப்படுத்தும் திருக்குறள் போன்று சிறப்பான இலக்கியம் வேறு எதுவும் இல்லை எனக் கூறினால் அது மிகையாகாது. இந்த வகையில் திருக்குறள் கூறிய அரிய கருத்துக்களைக் கருத்தில் கொண்டு நாம் எமது வாழ்வில் வளம் பெற வேண்டும். 'மாற்றம் ஒன்றே மாறாதது' எனவே இம்மாற்றத்தை ஏற்படுத்த திருக்குறளைத் துணையாகக் கொள்வோம்.

**சி.வினோஜினி**
**யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 21 வியாழக்கிழமை 04.05.2023 கதிர் 48


## பதில் நிதியமைச்சராக ஷெஹான் சேமசிங்க

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலண்டன் சென்றிருப்பதன் காரணமாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு ஜனாதிபதி நேற்று உத்தியோகபூர்வமாக நியமனம் வழங்கினார் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி இலண்டன் விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பும் வரை நிதி அமைச்சராக ஹொன் சேமசிங்க கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (02)

### தையிட்டி விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து யாழ். மாவட்ட எம்.பிக்கள் வெளிநடப்பு

### நேரில் சென்று போராட்டக்காரர்களுக்கும் ஆதரவு தெரிவிப்பு






**யாழ்ப்பாணம், தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டு கலசகுடமுழுக்குச் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று வெளிநடப்புச்செய்தனர். அவர்களுடன் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் கூட்டத்திலிகுருந்து வெளிநடப்புச் செய்தார்.**

2

## தேசிய அரசு பற்றி ஜனாதிபதி வாயே திறந்தது இல்லையாம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.



தேசிய அரசு உருவாக்கம் பற்றி இப்போது பேசப்படுகின்றது. ஓரிரு நாட்களுக்கு முன் இடம்பெற்ற ஐக்கியதேசியக்கட்சியின்முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலும் இது பற்றிப் பேசப்பட்டது. அதில் கலந்துகொண்ட பலர் இது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

நாங்கள் அறிந்த வகையில் ஜனாதிபதி தேசிய அரசு பற்றிப் பேசவே இல்லை என்று பதிலளித்தார் ஐ.தே.கவின் முக்கியஸ்தர் சாகல ரத்நாயக்க.

தேசிய அரசு பற்றிப் பேசியது எதிர்க்கட்சியினர்தான். அவர்களே அது பற்றிப் பேசிவிட்டு இப்போது அரசுடன் இணையப்போவதில்லை என்று சொல்கின்றார்கள். அவர்களுக்குத்தான் தேசிய அரசு தேவை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஐ.தே.கவின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முழு நாடாளுமன்றமும் ஒரே ஆட்சியாகச் செயற்படுகின்றது – என்றார். (02)

## தையிட்டி விகாரை குறித்த சர்ச்சைக்கு நீதிமன்றை நாட ஆளுநர் ஆறிவுறுத்து

தையிட்டி விகாரை விடயம் தொடர்பில் நீதிமன்றத்தினை நாடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தினார்.

தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தலைமையில் போராட்டம் நடந்து வரும் நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டோரை பொலிசார் தாக்கினர் எனவும் அத்துமீறி விரட்டியடித்தனர் எனவும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து நடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பும் செய்தனர்.

இதையடுத்து, குறித்த விகாரை விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுமாறு ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிறுத்தினார்.

நீதிபதியினை குறித்து இடத்திற்கு நேரில் அழைத்துச் செல்வது மிக உசிதமான விடயம் எனவும் தெரிவித்திருந்தார்.

## தையிட்டியில் 5 பேர் கைதாகிப் பிணையில்

தையிட்டியில் சட்டவிரோத விகாரைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 5 பேர் இன்று அதிகாலை பலாலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தால் இன்று பிற்பகலில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்டம், பலாலியை அண்டியுள்ள கிராமமான தையிட்டியில் சட்டவிரோதமாகத் தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட திஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாழக்கிழமை பிற்பகல் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்று அவர்கள் அறிவித்திருந்தனர். ஆனால், நேற்றிரவு பொலிஸார் போராட்டக்காரர்களை அடித்து விரட்டினர்.


2

## மூன்று நோய்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை










நாட்டில் டெங்கு, மலேரியா, எலிக் காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், 48 மணி நேரத்துக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் மருத்துவ சிகிச்சை பெறுமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மக்கள் தாங்கள் எந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து சொந்த முடிவுகளை எடுக்க வேண்டாம் என்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். டெங்கு, மலேரியா மற்றும் எலிக் காய்ச்சல் ஆகிய மூன்று நோய்களும் தற்போது வியத்தகு அளவில் அதிகரித்துள்ளன.

எனவே, 48 மணி நேரத்துக்கு மேலாகக் காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரையில் 30 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதற்கிடையில், மழைக் காலத்தில் எலிக்காய்ச்சலால் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தொற்றுநோயியல் பிரிவின் கூற்றுப்படி, இரண்டு பருவ மழைகளைத் தொடர்ந்து எலிக்காய்ச்சல் உச்சத்தை அடைவதால், பருவகால மாறுபாட்டால் நோய் பரவும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இந்தச் சூழலில், சுகாதார அதிகாரிகள், குறிப்பாக உள்ளங்கால் அல்லது கால்களில் காயங்கள் வெளிப்பட்டால், தண்ணீர் அல்லது சேற்றில் இறங்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

காய்ச்சல், தசைவலி, நிறம் மாறுதல் போன்ற நோயின் அறிகுறிகள் இருந்தால் அரச மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்

2

## ராஜிதவை வெளியேற்றும்படி சஜித்துக்கு தொடர் அழுத்தம்

அரசுடன் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் ராஜித சேனாரத்னவைத் தொடர்ந்தும் கட்சிக்குள் வைத்திருந்தால் கட்சிக்கு ஆபத்து. அவரை உடனே நீக்க வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் கட்சியின் முக்கியஸ்தர்கள்.



ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அரசுடன் இணைய வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற ராஜித சேனாரத்ன அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி இதே கருத்தைப் பகிரங்கமாகக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கட்சிக்குள் ராஜிதவுக்கு எதிர்ப்புக்கள் கிளம்பின.

ராஜித விரும்பினால் அரசுடன் இணையட்டும். ஆனால், கட்சிக்குள் இருந்துகொண்டு கட்சி அலுவலகத்தைப் பயன்படுத்தி இவ்வாறான கருத்துக்களை அவர் வெளியிடக்கூடாது – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் விசனம் தெரிவித்தனர்.

ராஜிதவைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கட்சியின் முக்கியஸ்தர்கள் – உறுப்பினர்கள் எனப் பலரும் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வலியுறுத்தினர்.

அதையடுத்து ராஜிதவுக்கு எதிராக ஒழுக்காற்று

2

## ‘மொட்டு’வில் பஸிலுக்கு எந்தப் பதவியும் இல்லை

### சாகர பரபரப்புத் தகவல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் பஸில் ராஜபக்சவுக்கு எந்தப் பதவியும் இல்லை என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அவர் மேலும் தெரிவித்ததாவது:



மொட்டுக் கட்சியில் பஸிலுக்கு எந்தப் பதவியும் இல்லை.

2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சகலரும் சேர்ந்து எதிர்க்க வேண்டும்!

### ஜே.வி.பி. வலியுறுத்து

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதை அரசு பிற்போட்டாலும் அந்தச் சட்டமூலத்தை எல்லோரும் சேர்ந்து எதிர்க்க வேண்டும் என்று ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரசிடம் இதைச் செய்யுங்கள் என்று அழுத்தம்

2



# ஆக்கிரமித்த காணிகளை தர கோருகிறது இராணுவம்





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் புதன்கிழமை நடைபெற்றபோது தமது முகாம் அமைக்கப்பட்டுள்ள இடத்தைத் தமக்குரியதாக்குவதற்கான ஆவணங்களைத் தருமாறு இராணுவ அதிகாரி கோரிக்கை வைத்தார். பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரியே இந்தக் கோரிக்கை முன்வைத்தார்.

ஒட்டுசுட்டான் நகர மையப் பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தின் 25 ஏக்கர் காணி மற்றும் இரண்டு தனிநபர் காணி மற்றும் இந்து மயானம் ஆகியவற்றை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள 64 ஆவது படைப்பிரிவு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளுக்கே இராணுவம் உரிமை கோருகின்றது.

இந்த நிலையில் மக்களின் காணித் துண்டுகளும் இந்து மயானமும் விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது, அது இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் மீதி 25 ஏக்கர் காணி தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் தமது கருத்துக்களை இதுவரை வழங்கவில்லை என்பதால் அவர்களுடைய கருத்துக்கு பின்பே இது தொடர்பாக முடிவு வழங்கலாம் என்றும் பிரதேச செயலாளர் அங்குதெரிவித்தார்

# கைதிகளை உறவுகள் சந்திப்பதற்கு வாய்ப்பு

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளைமறுதினமும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகின்றது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கைதிகளின் உறவினர்களின் மூலம் அவர்களின் வீடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் உணவுப் பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை ஒருவருக்குப் போதுமான அளவில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உறவினர்களைப் பார்வையிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)



## லண்டனுக்கு பறந்தார் ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை இலண்டன் பயணித்துள்ளார்.

பிரிட்டனின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பதற்காகவே ஜனாதிபதி அங்கு சென்றுள்ளார்.

ஜனாதிபதியுடன் மேலும் 8 பேர் நாட்டிலிருந்து பயணித்துள்ளனர் என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்தார்.

பிரிட்டனின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா நாளைமறுதினம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. (02)

## பதில் பாதுகாப்பு அமைச்சரானார் பிரமித பண்டார தென்னக்கோன்

பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பதற்காக இன்று காலை இலண்டன் புறப்பட்டுச் சென்றார்.

இதன் காரணமாக, ஜனாதிபதி மீள நாடு திரும்பும் வரையில், பதில் பாதுகாப்பு அமைச்சராக, பிரமித பண்டார தென்னக்கோன் பதவி வகிப்பார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (02)

# ரணில் வீட்டுக்கு தீவைத்த விவகாரம் ஸ்ரீ ரங்காவிற்கு நீதிமன்றால் பிணை



ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் வீட்டுக்குத் தீவைத்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே ஸ்ரீ ரங்காவிற்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தப்பட்டவேளை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. ஸ்ரீரங்கா கடந்த வருடம் ஜுலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதியின் வீட்டிற்கு வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார். சட்டவிரோதமாக ஒன்று கூடியவர்களின் உறுப்பினரான இவர் வீட்டிற்கு சேதம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளிற்கு உதவினார் என சிஐடியினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஸ்ரீரங்கா சொத்திற்கு சேதம் ஏற்படுத்தும் தீயநோக்கத்துடன் அத்துமீறி உள்ளே நுழைந்தார் என குற்றம்சாட்டப்படலாம் எனவும் சிஐடியினர் தெரிவித்திருந்தனர்.

எனினும் ஸ்ரீரங்கா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவர் ஓர் ஊடகவியலாளராகவே அந்த இடத்தில் காணப்பட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.




## ஒங்கிணைப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அனைவரும் அங்கிருந்து நேரடியாக தையிட்டிக்குச் சென்று அங்கு விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோரைச் சந்தித்து அவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவும் விகாரைக்குச் சென்று அதன் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டனர்.

தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோரும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதனும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமுமே இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் தொடங்கியது. திணைக்களத் தலைவர்கள், பொது மக்கள் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் படை அதிகாரிகள் என்று பலரும் கலந்துகொண்டிருந்த கூட்டம் தொடங்கியதும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எழுந்து உரையாற்றினார். தையிட்டியில் விகாரை கட்டப்படக்கூடாது என ஏற்கனவே யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அந்தத் தீர்மானத்திற்கு எதிராக விகாரை கட்டப்பட்டுள்ளது. ஆனால், அதற்கெதிராக இந்த ஒருங்கிணைப்புக்குழு என்ன நடவடிக்கை எடுத்தது?

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் மேலும் இருவரும் அங்கே முற்றுகைக்குள் உள்ளார்கள். பொலிசார் மிகவும் மோசமாகச் செயற்பட்டு இருக்கிறார்கள். அமைதியாகப் போராட்டம் நடத்திய மக்களை விரட்டி அடித்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் நாங்கள் இந்தக் கூட்டத்தில் தொடர்ச்சியாகப் பங்கு பற்றுவது உசிதமானதல்ல என்று கூட்டத்தில் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இவை அனைத்தையும் கண்டித்துக் கூட்டத்தில் இருந்து தாம் வெளிநடப்புச் வெளிநடப்பு செய்கிறார்கள் என்றும் அறிவித்தார். அங்கிருந்து உடனடியாக வெளியேறிய அவர்கள் நேரடியாகத் தையிட்டிக்குச் சென்று அங்கு போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோருடன் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடினர். அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சிறிது நேரம் அவர்களுடன் அமர்ந்திருந்து தமது எதிர்ப்பையும் பதிவு செய்தனர்.

## பயங்கரவாத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்க முடியாது; செய்ய வேண்டாம் என்று கூறவும் முடியாது. அப்படியொரு சட்டமூலம் இது.

சர்வதேசநாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு மக்களின் எதிர்ப்பு வந்தால் அதைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் எங்களிடம் இருக்கின்றது என்று நாணய நிதியத்திடம் காட்டுவதற்காகவே அரசு இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றது.

இதை எல்லோரும் சேர்ந்து எதிர்க்க வேண்டும். தனக்கு ஆபத்து வரும் வரை எவரும் இருக்கக்கூடாது. மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அது எல்லோருக்கும்தான். அதனால் எல்லோரும் ஒன்றிணைந்து இதை எதிர்க்க வேண்டும்.

சில சமூகச் செயற்பாட்டாளர்கள் சாப்பிடுவதற்கு மாத்திரமே வாய் திறக்கின்றார்கள். அவர்களுக்கென்று பிரச்சினை வரும்போதுதான் சத்தம் போடுவார்கள். – என்றார் . (02)

## மூன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் சுகா தார பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மலேரியா எதிர்ப்புச் பிரசாரத்தின் பணிப்பாளர், வைத்தியர் சம்பா அலுத்வீர கூறுகையில்,

மலேரியா நோயாளி களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டை விட ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது.

2022 இல் மொத்தம் 37 மலேரியா நோயாளிகள் பதிவாகினர். இருப்பினும், ஜனவரி 2023 முதல் 17 மலேரியா நோயாளிகள் உள்ளனர். அனைத்து நோயாளிகளும் வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்களாவர்.

அண்மையில் வெளி நாட்டில் இருந்து நாடு திரும்பிய பேருவளையைச் சேர்ந்த ஒருவர் மலேரியா நோயினால் உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. – என்றார். (02)

## மொட்டுவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கட்சியின் ஸ்தாபகர் மட்டுமே. அவரை மொட்டுவின் தேசிய அமைப் பாளர் என்று ஊடகங்கள் கூறினாலும் அப்படி யொரு பதவி அவருக்கு வழங் கப்படவில்லை.

எமது கட்சி ஒருபோதும் உத்தியோகபூர்வமாக அவர் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்று அறி வித்ததில்லை. அவரை நாங்கள் கட்சியின் ஸ்தாபகர் என்றே அறிமுகப்படுத்தி வரு கின்றோம். –என்றார். (02)

### காப்புறுதிப் பணம் பெறும் நோக்குடன்

# நண்பன் மூலம் மனைவியை கொன்ற 24 வயது இளைஞர்

ஆயுள் காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மனைவியைக் கொன்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 24வயதுடைய இளைஞர், தனது நண்பருக்கு 20 இலட்சம் ரூபாவையும், வாடகை வாகனம் ஒன்றை யும் கொடுத்து, விபத்தை ஏற்படுத்தி தனது மனைவியைக் கொலை செய்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி எல்பிட்டிய, பிடிகல - மாபலகம பிரதேசத்தில் 40 வயதுடைய பெண் ஒருவர் விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரை விபத்துக்குள்ளாக்கிய ஜீப் ரக வாகனம் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தது.

இது குறித்து எல்பிட்டிய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்த பெண் ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஊழியர் என்றும், அவர் 4 நிறுவனங்களிடம் 50 இலட் சம் ரூபாவுக்கு ஆயுள் காப்பீடு எடுத்துள்ளார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், மனைவியைக் கொலை செய்து, அதனை விபத்து எனக் காப் புறுதி நிறுவனங்களிடம் நிரூபித்து ஆயுள் காப்பீட்டுகளைப் பெறுவதற்குச் சந்தேகநபர் திட்டமிட்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேகநபர் காலி பிரதேசத்தில் வசிக்கும் வேலையற்ற இளைஞர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

## ராஜிதவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையை மேற்கொள்ளுமாறு கட்சி செயலாளர் ரஞ்சித் மத்து ம பண்டார, கபீர் ஹாசீம், திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட ஒழுக்காற்றுக் குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்தார் சஜித்.

ரஞ்சித் மத்தும பண் டாரவின் வீட்டில் விசா ரணை ஏற்பாடு செய்யப்பட்டது. விசாரணைக் கான அழைப்பை விடுத்ததும் அழைப்பை ஏற்று உடனே ஆஜராகி தனது விளக்கத்தை வழங்கினார் ராஜித.

அந்த விளக்கம் எவ்வாறு இருப்பினும், அரசுடன் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் அவரைத் தொடர்ந்தும் கட்சிக் குள் வைத்திருந்தால் கட்சிக்கு ஆபத்து என்றும், அவரை உடனே நீக்க வேண்டும் என்றும் கட்சிக்குள் இருந்து தொடர்ந்தும் தலைவர் சஜித்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது என அறியமுடிகின்றது. (02)

## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் சட்டதரணி காண்டீபன் ஆகியோருக்கு உணவு, மருந்து என்பன எடுத்துச் செல்லப்படுவதையும் பொலிஸார் தடுத்தனர். இதுகுறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறையிடப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களின் தலையீட்டினால் பின்னர் உணவு மற்றும் மருந்து வழங்குவதற்குப் பொலிஸார் அனுமதித்தனர்.

இதைத் தொடர்ந்து இன்று அதிகாலை போராட்ட இடத்தில் பந்தல் போட முற்பட்டவர்கள் உள்ளிட்ட ஐந்து பேரை இன்று அதிகாலையில் கைது செய்த பலாலி பொலிஸார், நண்பகலில் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிவான், சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து பார்வையிட்டதுடன் சந்தேகநபர்கள் அனைவருக்கும் பிணை வழங்கினார். அத்துடன் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடுவதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தக்கூடாது என்றும் கட்டளை பிறப்பித்தார்.

இது தொடர்பாக சட்டத்தரணி க.சுகாஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

ஜனநாயக வழியில் போராடிய தமிழ் மக்களையும் எங்களையும் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடத்தி, பொய்யான வழக்கை தாக்கல் செய்து ஐந்து பேரை நீதிமன்றத்திலே முற்படுத்தியிருந்தார்கள். அவர்கள் ஐந்து பேரையும் நாங்கள் பிணையில் விடுவித்திருக்கின்றோம். நீதிவான் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து உண்மை நிலையை ஆராய்ந்து கட்டளை ஒன்றை வழங்கியுள்ளார்.

அமைதியான முறையில் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இது ஜனநாயக ரீதியாகப் போராடிய மக்களுக்கும் எங்களுக்கும் கிடைத்த வெற்றி. நீதிமன்றக் கட்டளை மதித்து எமது போராட்டம் தொடரும் – என்றார்.

## ஒட்டுசுட்டான் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் புதன்கிழமை பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், பிரதேச செயலாளர் பா.ஜெயராணி மற்றும் திணைக்கள தலைவர்கள் இராணுவத்தினர் பொலிசார் மற்றும் அரச அதிகாரிகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்

இதன் போது நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறுப்பட்ட துறைகள் சம்பந்தமாக பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் பிரதேசத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. அதற்கான மாற்றுத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன.

# மிகமோசமான மட்டத்தில் இலங்கை மதச்சுதந்திரம்!

## மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு காட்டம்

இலங்கையின் நிலைவரம் கடந்த 2022 ஆம் ஆண்டில் மிகவும் கரிசனைக்குரிய மட்டத்தில் காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டியுள்ள மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, எனவே இலங்கையை 'விசேட கண்காணிப்புப் பட்டியலில்' சேர்க்குமாறு அமெரிக்க அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் மதச் சுதந்திரப்போக்கு எத்தகைய மட்டத்தில் காணப்பட்டது? அந்நாடுகளின் மதச்சுதந்திர நிலைவரம் தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விரிவான விவரங்களை உள்ளடக்கிய 98 பக்க அறிக்கையை மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கடந்த ஆண்டு இலங்கையின் மதச்சுதந்திர நிலைவரம் மிகவும் கரிசனைக்குரிய மட்டத்தில் காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக முஸ்லிம் மற்றும் இந்துக்களை இலக்குவைத்து அரசாங்கம் கரிசனைக்குரிய சட்டங்களைப் பிரயோகித்ததாகவும், அவர்களுக்கு எதிராக ஒடுக்குமுறை செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு, 'அரகலய' என்று அழைக்கப்பட்ட போராட்ட இயக்கத்துடன் இணைந்துசெயற்பட்ட மதத்தலைவர்கள் அரசாங்கத்தினால் இலக்குவைக்கப்பட்டதாகவும், மத சிறுபான்மையினருக்கு எதிராக அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் சமூக வலைத்தளங்களில் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்ட முஸ்லிம்கள் அடையாளங்காணப்பட்டு, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசசமவாயச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் பிரயோகம் தொடர்பில் தமது வருடாந்த அறிக்கையில் விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க ஆணைக்குழு, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் கூறி, எவ்வித குற்றச்சாட்டுக்களுமின்றி முஸ்லிம் சமூகத்தைச்சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களென சுமார் 300 பேர் இந்தச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளது.

அத்தோடு இலங்கை அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகித்ததாகவும், 2022 ஓகஸ்ட் மாதத்தில் பயங்கர வாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருப்பதாகக்கூறி பல தமிழ் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களும்தனிநபர்களும்பாதுகாப்பு அமைச்சால் தடைசெய்யப்பட்டதாகன எனவும் மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் மதச்சுதந்திரம் தொடர்பான சர்வதேச சட்டம் தீவிரமாக மீறப்பட்டுள்ளமையைக் கருத்திற்கொண்டு இலங்கையை 'விசேட கண்காணிப்புப்பட்டியலில்' சேர்க்குமாறு மேற்படி ஆணைக்குழு அமெரிக்க அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குமாறு அல்லது அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும்படி அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறும் அந்த ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51%1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறும் மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுஅந்நாட்டுஅரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டவேண்டிய நேரத்தில் நாம் மக்கள் பலத்தைக் காட்டுவோம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

மக்கள் பலம் மற்றும் அரசியல் பலத்தை காட்டவேண்டிய நேரம் இதுவல்ல. நாடு எதிர்கொண்டுள்ள சவாலை எவ்வாறு வெற்றிகொள்ளவதென்ற வேலைத்திட்டத்தை அமைத்துக்கொண்டு முன்னுக்கு செல்வதே எமது நோக்கம். அதனாலே ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டத்தை எளிமையான முறையில் நடதினோம் என ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்று குழு உறுப்பினர் சட்டத்தரணி விதானபத்திரண தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய கட்சி மேதின கூட்டத்தை சுகததாச உள்ளக அரங்கில் நடத்தியமை தொடர்பாக பலரும் விமர்சித்து வருகின்றனர். மேதின கூட்டத்தை வழமையான மேதினகூட்டங்களைப்போல்பிரமாண்டமாக நடத்துவதற்கு முடியும். நாங்கள் செய்தும் காட்டி இருக்கிறோம்.

ஆனால் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையில், மேதின கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களை நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் அழைத்து வந்து, அதனால் அவர்கள் வீண் சிரமங்களை எதிர்கொள்வது தற்போதைய நிலையில் பொருத்தம் இல்லை.

அதனால் நாடு மற்றும் ஆதரவாளர்களை கருத்திற்கொண்டு வழமையான மேதின சம்பிரதாயங்களுக்கு மாற்றமாக இம்முறை மேதின கூட்டத்தை எளிமையான முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனை வழங்கி இருந்தார்.

அதன் பிரகாரம் நாட்டின் தூரப்பிரதேசங்களில் இருந்து மிகவும் குறைவான ஆதரவாளர்களை அழைத்திருந்தோம். மேதினத்தின் எமது நோக்கமாக இருந்தது, நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றிகொண்டு முன்னுக்கு செல்ல வேலைத் திட்டங்களை வெளிப்படுத்துவதாகும். அதன் பிரகாரம் தொழில் அமைச்சர் மனு நாணயக்கார தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முதலீட்டாளர்களை நாட்டுக்கு அழைத்துவரத் தேவையான 11 பிரேரணைகளை சமர்ப்பித்திருந்தார்.

மேலும் நாட்டின் ஜனாதிபதியின் கட்சி என்றவகையில் எனைய கட்சிகளைப் போன்று எமக்கும் பேரணிகளையும் வாகன கண்காட்சிகளையும் நடத்தி, ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைத்து வந்து எமது பலத்தைக் காட்ட முடியும். ஆனால் மக்கள் பலத்தையும் அரசியல் பலத்தையும் காட்டும் தறுணம் இதுவல்ல.

மக்கள் மற்றும் அரசியல் பலத்தை காட்டவேண்டிய சந்தர்ப்பத்தில் அதனை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு நாட்டின் ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு, மேதின கூட்டத்துக்கு மக்களை ஒன்று சேர்ப்பது பெரிய விடயமல்ல. – என்றார்.

# பாதிக்கப்பட்ட தரப்பினரை அச்சுறுத்தும் செயற்பாட்டில் அலுவலகம் ஈடுபடவில்லை!

## காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மறுப்பு

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதுடன், அவர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டே செயற்பட்டுவருகின்றது.

மாறாக, பாதிக்கப்பட்ட தரப்பினரை அச்சுறுத்தும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையிலும் எமது அலுவலகம் ஈடுபடவில்லை என்ற உத்தரவாதத்தை என்னால் வழங்கமுடியுமென காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளரொருவர் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறு வலி யுறுத்திப் போராடிவரும் தம்மை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரி கள் அச்சுறுத்துகின்றனர் எனவும், சட்டநடவடிக்கைஎடுக்கப் படுமெனக்கூறி மிரட்டுகின்றனர் எனவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ள நிலையில், இது தொடர்பாகக் கேட்டறிவதற்காக அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்தவைத் தொடர்புகொள்ள முற்பட்டோம். இருப்பினும் அம்முயற்சி பலனளிக்காத நிலை யில், இதுபற்றி அலுவலகத் தின் ஆணையாளரொருவரிடம் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

'காணாமல்போனோரின் உறவினர்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளை ஒழுங்குபடுத்தியதன் பின்னர், அவர்களிடம் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொள்வோம். இந்த விசாரணையின்போது முறைப்பாட்டாளரின் விவரங்கள், காணாமல்போன நபர் பற்றிய விவரங்கள், இதற்கு முன்னதாக இது தொடர்பாக அளித்த முறைப்பாடு பற்றிய விவரங்கள், அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உதவிகள் (ஓய்வூதியம் போன்றவை), தற்போது என்ன எதிர்பார்க்கின்றார் என்ற விவரம் என்பன கோரப்படும். அந்த முறைப்பாட்டாளர் கூறுகின்ற பதிலின் அடிப்படையிலேயே நாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளைத் தயாரிக்கின்றோம். இதனை என்னால் எழுத்துமூல ஆதாரங்களின் அடிப்படையில் நிரூபிக்கமுடியும்' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தொலைபேசி அழைப்பின் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினரை அச்சுறுத்துகின்ற எந்தவொரு நபரும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தில் இல்லை. அதுதொடர்பாக நூற்றுக்கு நூறு சதவீத உத்தரவாதத்தை என்னால் வழங்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மற்றொரு விமான நிலையம் அமைக்க தயாராகும் அரசு!

விமானப்படையால் நடத்தப்படும் ஹிகுரக்கொடட விமான ஓடுதளத்தை மேம்படுத்தி மற்றுமொரு சிவில் விமான நிலையத்தை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று (புதன்கிழமை) துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சில் இடம்பெற்றது.

தற்போதுள்ள ஓடுபாதையின் நீளம் 2287 மீற்றர். இதனை 2800 மீற்றராக நீட்டித்து மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

விமான தளம் அமைத்தல், விமான இயக்க முறைமையின் ஏற்பாடு, கட்டுப்பாட்டு கோபுரம் அமைத்தல், பயணிகள் முனையங்கள் அமைத்தல் போன்றவை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. சிகிரியா, அநுராதபுரம், தம்புள்ளை போன்ற நகரங்களுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த விமான நிலையத்தின் கட்டுமானம் மிகவும் வசதியாக இருக்கும் என்று அதன் திட்டமிடுபவர்கள் கூறுகின்றனர்.

# நாமலைக் கடவுளால் கூட ஜனாதிபதியாக்க முடியாது!

## விமல் வீரவன்ஸ கடும் ஆக்ரோஷம்



நாமல் ராஜபக்சவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்க புனித கடவுளால் கூட முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

நாமல் ராஜபக்ஷ புரொய்லர் கோழி என்றும் அவரது தந்தை மஹிந்த ராஜபக்ச அரசியலின் கிராமத்து கோழி என்றும் கூறப்படுகின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் இனிவரும் காலத்தில் நாட்டின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்கள் என்றும், எனினும் அவர்கள் அரசியலில் ஏதாவது ஒரு மட்டத்தில் இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் போதும் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச இருந்திருந்தால் அதனை சரியாக நிர்வகித்திருப்பார் எனவும் பொருளாதாரம் இவ்வளவு பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருக்காது எனவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

# புதிய சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் நாட்டை ஆட்சியாளரால் கட்டியெழுப்ப முடியாது!

## கஜேந்திரன் இடித்துரைப்பு



இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை கொண்டு வராமல் புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் இந்த நாட்டைக்கட்டி எழுப்பமுடியாதுஎன நாடாளுமன்றஉறுப்பினர்செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிமாவட்டசெயலகத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு -

இந்த அரசாங்கம் ஒரு நேர்மையான நேர்வழியில் செல்வதற்குத் திருட்டுத்தனமாக தங்களுக்கு வேண்டப்படுகின்றவர்களுக்கு இந்த அரச நிறுவனங்களைவிற்று அதில்இலாபம் சம்பாதிக்க முற்படுகின்றார்களா? என்ற ஒரு கேள்விதான் எழுகின்றது.

சிறிலங்கா அரசுபுதியபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனர். அதனைத் தமிழர்கள் நூற்றுக்கு நூறுவீதம்எதிர்க்கின்றோம்.எங்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கும்பயங்கரவாததடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாகப்பயங்கரவாதஎதிர்ப்புசட்டமோ அல்லது வேறு எந்த சட்டங்களோ கொண்டுவரக்கூடாது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, அதனை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம்.

தற்போது கொண்டு வரப்படவுள்ளஇந்தசட்டத்தை முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் எதிர்க்கின்றார்கள். ஏனென்று சொன்னால் ஒட்டு மொத்தமாக அனைவரையும் ஒடுக்குகின்ற ஒரு சட்டமாகவே இது காணப்படுகிறது. ஒரு ஜனநாயக முறையிலான போராட்டத்தைக்கூட முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

சர்வாதிகாரப் போக்கிலேயே தொடர்ந்தும் ஊழல் மோசடிகளைச் செய்கின்ற அரசாங்கமாகவும் அதற்கு எதிராக மக்கள் சாதாரணமாக ஒரு ஜனநாயகப் போராட்டங்களைக் கூட நடத்த முடியாத அளவிற்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்காகத் தான் இந்த சட்டங்களைக் கொண்டு வரப்படுகின்றனவா? என்ற கேள்வி தான் மக்கள் மத்திலே எழுந்து நிற்கின்றது. இந்த நிலைமையிலே இவர்கள் போனால் சர்வதேச நாடுகளில் இருந்து கிடைக்கும் ஆதரவுகள் குறிப்பாக நிதியுதவிகள் கூடப் பெற முடியாத நிலை ஏற்படக்கூடும்.

எங்களைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினைக்கு ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு எட்டப்படாதவரைக்கும் எத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்தாலும் என்ன? எத்தகைய தனியார் மயப்படுத்தல்களைக்கொண்டுசெய்தால் என்ன? எத்தனை கண்துடைப்பு நடவடிக்கைகளைச் செய்தால் என்ன? இந்த நாட்டை இவர்களால் கட்டி எழுப்ப முடியாது.

ஆகவே, இவ்வாறான பித்தலாட்டங்களைக் கைவிட்டு இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை கொண்டு வருவதன் மூலமே இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வராமல், புதிய புதிய சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமோ அல்லது இருக்கும் அரச நிறுவனங்களைப் பல பிரிவுகளாகக்கூறுபோட்டுதனியாருக்கு விற்பதன் மூலமோ அல்லது தனியார் மயப்படுத்துவதன் மூலமோ புதிய புதிய ஆணைக் குழுக்களை உருவாக்குவதன் மூலமோ ஒரு பொழுதும் இந்த நாட்டை கட்டி எழுப்ப முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச ஒடுக்குமுறைகளால் ஊடக சுதந்திர இடைவெளி வெகுவாகச் சுருங்கியுள்ளது!

## இலங்கை நிலைவரம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை

கருத்துவெளிப்பாட்டுச்சுதந்திரத்தையும், எதிர்ப்புப்போராட்டங்களையும், கேள்வி எழுப்புதலையும் சகித்துக்கொள்ளமுடியாத அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளால் இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கான இடைவெளிவெகுவாகச்சுருக்கமடைந்துள்ளது என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரண தெரிவித்துள்ளார்.

உலக பத்திரிகை சுதந்திர தினமான நேற்று (புதன்கிழமை) இலங்கையில் ஊடக சுதந்திரம் எவ்வாறான நிலையில் உள்ளது என்பது குறித்தும், அண்மையகாலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள் தொடர்பிலும் கருத்து வெளியிடுகையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபையின் செயற்பாட்டாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தையும், எதிர்ப்புப்போராட்டங்களையும், விமர்சனங்களையும், கேள்வி எழுப்புதலையும் சகித்துக்கொள்ளமுடியாத அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளால் அண்மையகாலங்களில் ஊடக சுதந்திரத்துக்கான இடைவெளி என்பது மிகவும் சுருக்கமடைந்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். அத்தோடு 'ஊடகங்களை அமைதிப்படுத்துவதற்காக சட்டங்களை முறைகேடாகவும், ஓர் ஆயுதமாகவும் பயன்படுத்துவது வழமையான விடயமாக மாறியுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரியும் சிறுபான்மையின ஊடகவியலாளர்கள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றும் த்யாகி ருவன்பத்திரண குறிப்பிட்டார். மேலும் தகவல் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும், மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கும் ஊடக சுதந்திரம் என்பது இன்றியமையாததாகும் என்று வலியுறுத்திய அவர், 'ஊடகவியல் ஒரு குற்றமல்ல' என்றும் தெரிவித்தார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எச்சரிக்கையாக இருப்போம்

அண்மைய நாட்களில் கொரோனா பெருந்தொற்றுப்பாதிப்பால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் நால்வர் தொற்றுக்காகச் சிகிச்சை பெற்றுள்ளனர். அதேபோன்று தெற்கிலும் பலருக்குக் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது பலரும் காய்ச்சலால் பீடிக்கப்படுவது அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ள மருத்து சங்கம், இது கொரோனாவைப் பரப்பும் கொவிட்–19 நுண்மியின் திரிபினால் ஏற்படுவதாக இருக்கக்கூடும் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளது. இலங்கை மருத்துவச் சங்கத்தின் தலைவரான மருத்துவர் வின்யா ஆரியரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

"இந்த நோயின் தன்மை இதுதான். புதிய ரகங்கள் உருவாகி வருகின்றன. நாம் உண்மையில் வகைகளை புரிந்து கொள்ளவில்லை. வகைகளை ஆய்வு செய்து அவற்றின் அறிக்கைகளைப் பெறுவதற்கு நேரம் எடுக்கும். இந்தோனேஷியா, வியட்நாம், சிங்கப்பூர் போன்ற அனைத்து நாடுகளிலும் மீண்டும் அதிகமான கோவிட் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். ஆனால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. குறிப்பாக இது இன்ஃப்ளுயன்ஸா போல பரவுவதால், கொவிட் நோயிலிருந்து அவற்றை வேறுபடுத்துவது கடினம், எனவே கொவிட் காலத்தில் பின்பற்றப்பட்ட அதே சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் பின்பற்றவேண்டியது அவசியம். குறிப்பாக முகக் கவசங்களைச் சரியாக அணிவது அவசியம்" என்று மருத்துவர் வின்யா தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் தற்போது மழை பெய்து வருவதால் தொற்று நோய்களும் காய்ச்சலும் பரவுவது அதிகரித்திருக்கின்றது என்று மருத்துவ சங்கம் தெரிவிக்கின்றது. எனவே நாம் கவனமாக இருப்பது அவசியம்.

ஒருபுறத்தில் கொரோனா திரிபின் அச்சுறுத்தல் என்றால் மறுபுறத்தில் டெங்கின் அச்சுறுத்தலும் தீவிரமாக இருக்கின்றது. அதிலும் கிழக்கில் டெங்கினால் கடும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக மருத் துவத் தகவல்கள் கூறுகின்றன. வடக்கிலும் மழை பெய்து வருவதால் அடுத்து வரும் நாட்களில் இங்கும் டெங்கின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உயரும் என்று எதிர்பார்க்கலாம். எனவே நாம் கூடுதல் அவதானத்துடன் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

கொரோனாவில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்கு முகக் கவசங்களை அணிவது எவ்வளவு இன்றியமைதாததோ அதேபோன்று டெங்கில் இருந்து பாதுகாப்புத் தேட, வீட்டையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருப்பதும் அவசியம். டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வகையில் நீர் தேங்காது சுற்றுப்புறச் சூழலை எப்போதும் தூய்மைப்படுத்தி வைத்திருப்பது இன்றியமையாதது. அதிகாரிகள் வந்து சோதனையிட்டு எச்சரிக்கை செய்தால்தான் சுற்றுப்புறத்தை தூய்மையாக்குவோம் என்று அடம் பிடிக்காமல் நாமே முன்னுணர்ந்து தேவையானவற்றைச் செய்வதன் மூலம் இந்தக் காலத்தில் பாதுகாப்புத் தேடிக்கொள்வதே சிறந்தது.

வருமுன் காப்பதே வந்த பின்னர் கவலைப்படுவதைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி.

# ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது

## பந்துல உறுதி



தேசிய மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஆபத்து ஏற்படவுள்ளதாக போலி வதந்திகள் பரப்பப்படுகின்றன.

நாணய நிதியத்தின் ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட்டதைப் போன்று கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் வெளிப்படைதன்மையுடனேயே முன்னெடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு புதன்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இறுதி தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. எனினும் இதனை அடிப்படையாகக் கொண்டு சில தரப்பினரால் போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதற்கமையவே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் வதந்திகளைப் பரப்புகின்றனர். எனினும் இவை உண்மைக்குப்புறம்பானவையாகும்.

தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் பொருளாதார நிபுணர்களுடன் பரந்துபட்ட பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளும் இன்னும் நிறைவடையவில்லை. இதற்காக பிரான்ஸின் லசார்ட் மற்றும் கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனங்கள் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடம் தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றுடன் மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஏனைய நாடுகளின் நிதி அமைச்சு உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் நீண்ட பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன. எவ்வாறிருப்பினும் எந்தவொரு தரப்பினருடனும் இதுவரையிலும் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை.

நாட்டுபிரஜைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கடன் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே அரசாங்கம் எதை செய்தாலும் வெளிப்படைத் தன்மையுடன் செய்யும். அதன் காரணமாகவே இம்முறை நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. – என்றார்.

# வெளிநாட்டு விஜயத்தின் பின் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு!

## வடிவேல் சுரேஷிடம் ஜனாதிபதி உறுதி



பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தனது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணம் நிறைவடைந்ததன் பின்னர் நிரந்தரத் தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு சுமுகமாக நிறைவடைந்துள்ள போதிலும் , தற்போது அரசாங்கத்துடன் இணையும் எதிர்ப்பார்ப்பு இல்லை என்றும் , பெருந்தோட்ட மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கப் பெற்றால் அதன் பின்னர் அது தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியுடனான சந்திப்பில் பெருந்தோட்ட மக்கள் சமுர்த்தி பட்டியல் உள்ளிட்ட எந்தவொரு நலன்புரி திட்டங்களிலும் உள்வாங்கப்படுவதில்லை என்பதையும் , பெருந்தோட்டக் காணிகள் பராமறிப்பின்றி காடுகளாகின்றமை தொடர்பிலும் , தொழிலாளர்கள் குளவி , சிறுத்தைகள் மற்றும் காட்டு யானைகளின் தாக்குதலுக்குள்ளாகின்றமை தொடர்பிலும் தெளிவுபடுத்தினேன்.

உத்தியோகபூர்வமாக வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளமையால் , அந்த விஜயத்தின் பின்னர் என்னால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

சமுர்த்தி அதிகாரிகள் , பெருந்தோட்டக் கம்பனிகள் , பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்வுகளை வழங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எனினும் அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் எந்தக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. தற்போது அவ்வாறான எதிர்பார்ப்பும் இல்லை.

தீர்வுகள் வழங்கப்பட்ட பின்னரே அது தொடர்பாகப் பரிசீலிக்க முடியும். இதே வேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுடனும் சந்திப்பு இடம்பெற்றது. அவர் விரைவில் மடுல்சீமை பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களை சந்திப்பதாகக் குறிப்பிட்டார். – என்றார்.

# 14 சவூதி பிரஜைகள் உட்பட 220 பேர் சூடானிலிருந்து வெளியேற்றம்



சவூதி அரேபிய அரசானது அதன் தலைமைத்துவத்தின் வழிகாட்டுதலின் கீழ், சூடான் குடியரசில் சிக்கித் தவிக்கும் பல்வேறு நாட்டினரையும் வெளியேற்றும் முயற்சியின் தொடர்ச்சியாக, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட 14 சவூதி பிரஜைகளும் மற்றும் அமெரிக்கா, கனடா, தென் சூடான் மற்றும் ஏமன் போன்ற நாடுகளைச் சேர்ந்த 206 பேரும் ஜெத்தா நகரை வந்தடைந்தனர் என இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்கள் மன்னரின் கப்பலான 'ரியாத்' மூலம் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் தத்தமது நாடுகளுக்கு புறப்படுவதற்குத் தயாராகும் வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் சவூதி அரேபியா காட்டிவரும் ஆர்வத்தினையும் தூதுவர் உறுதிப்படுத்தினார்.

இவர்களை சூடானிலிருந்து வெளியேற்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சூடானில் இருந்து இதுவரை மொத்தமாக 102 நாடுகளைச் சேர்ந்த 5629 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் 239 பேர் சவூதி பிரஜைகள் என்றும் 5390 பேர் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லப்படுகிறது.



# தையிட்டி திஸ விகாரை எதிர்ப்பும் பின்னணியும்

ந.லோகதயாளன்





யாழ்ப்பாணம் மாவட்டம் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் தையிட்டி கிராமத்தில் உள்ள கலைவாணி வீதியில் மாவட்டத்தின் மிக உயரமான விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது. விகாரையைக் கட்டத் தொடங்கும்போது பேசாமல் இருந்துவிட்டு, கட்டி முடிந்த பின்னர் பொங்கியெழுந்து என்ன பயன் என்கிற விமர்சனத்தை சமூக ஊடங்களில் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

விகாரையின் வரலாற்றைப் பற்றிய எந்த அறிவும் இல்லாதவர்கள் என்பதால் அவர்களால் இவ்வாறு சகட்டு மேனிக்கு விமர்சிக்க முடிகின்றது. அவரகள்கு மட்டுமல்ல, இன்று போராடப் புறப்பட்டுள்ள அரசியல் கட்சிகளுக்கேகூட இந்த விகாரை பற்றிய முழுமையான வரலாறு தெரியாது என்று அடித்துச் சொல்லமுடியும்.

யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தில் ஜே-250 கிராம சேவகர் பிரிவு தையிட்டி கிராமம். அங்கு ஏழரைப் பரப்புக் காணி நயினாதீவு நாக விகாரையின் பெயரில் அறுதி உறுதியாக உள்ளது. தற்போதைய விகாரையானது நயினாதீவு விகாரைக்கு உரித்தான இந்த ஏழரைப் பரப்பு நிலத்தில் அமைக்கப்படவில்லை. பதிலாக 1990ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று தமது வீடுகளைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட அப்பாவி மக்களின் நிலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த நில உரிமையாளர்களின் எந்தவிதமான ஒப்புதலும் இன்றியே இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலப் பகுதியை இராணுவத்தினர் இன்னும் விடுவிக்கவில்லை. அது முகாம் பகுதியாகப் பெயரிடப்பட்டுள்ளது.

கலைவானி வீதியை முகப்பாகக்கொண்டுள்ள நாக விகாரைக்கு உரித்தான நிலத்திற்கு அப்பால் முடத்தி கலட்டி என்னும் 3431 இலக்க உறுதியின் பிரகாரம் 21 மற்றும் 9 பரப்புக் காணியும், 4383 இலக்க உறுதியின் அடிப்படையில் 14 பரப்புக் காணியும், கந்தவனம் தம்பையா என்னும் பெயரில் 4118 இலக்க உறுதியில் 9 பரப்புக் காணிகளும் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பே எழுதப்பட்ட அறுதி உறுதிகளாக உள்ளன. இதேபோன்று ஆறுமுகம் பத்மநாதனிற்குச் சொந்தமான 2881 இலக்க உறுதியின் பிரகாரம் 1972ஆம் ஆண்டு கிடைத்த 8 பரப்பும், அப்புத்துரை சிவகுமாரின் 396ஆம் இலக்க 1989-10-08ஆம் திகதிய உறுதியின் பகுதி நிலமும் அப்புத்துரை சுரேஸ்குமாரின் அதே இலக்க உறுதியின் பகுதி நிலமும் இந்த விகாரை அமைப்புக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மேலும் சீனியர் சிவசம்பு, பொன்னம்பலம் பூரணம், நாகரத்தினம் கங்காதரன் ஆகியோரது நிலத்துடன் மேலும் மூவரது நிலத்தையும் உள்ளடக்கிய 8 ஏக்கர் நிலம் இந்த இந்த விகாரைக்காக அபகரிக்கப்பட்டுள்ளது. 2019இல் இங்கு கட்டடப் பணி தொடங்கப்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கது திஸ விகாரை என்று பெயரிடப்பட்டுள்ளது. 1990ற்கு முன்பு காங்கேசன்துறையில் இதே பெயரில் ஒரு விகாரை இருந்தது. காங்கேசன்துறையில் கார்பர் வியூ கோட்டல் என அறியப்பட்ட விடுதி அமைந்திருந்த இடத்திற்கு அருகே துறைமுகத்தை ஒட்டியே திஸ விகாரை முன்னர் அமைந்திருந்தது என பிரதேச சபை ஆவணங்கள் கூறுகின்றன. அப் பிரதேசம் தற்போது கடற்படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளதோடு அங்கே அந்த விகாரை இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. ஆனால் உறுதிப்படுத்த முடியவில்லை.

பழைய திஸ விகாரை இருந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவிலேயே மக்களின் காணிகளை ஆக்கிரமித்துப் புதிய விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடத்தில் விகாரை அமைக்கக் கூடிய வகையில் நயீனாதீவு விகாரைக்குரிய நிலம் இருக்கும்போது மக்களின் காணிகளை அபகரிக்கும் தேவை ஏன் எழுந்து என்பது மர்மமாகவே உள்ளது. அது தமிழரின் நிலம் என்பதனால் மட்டுமே அபகரிக்கப்படுகின்றது என்பதைத் தவிர வேறென்ன காரணத்ததை இதற்குச் சொல்ல முடியும். தமிழரின் நிலம் படையினருக்காகவும், அபிவிருத்தி என்னும் பெயரிலும் மட்டும் அபகரிக்கப்படவில்லை முற்றும் துறந்து பரி நிர்வாணம் அடைந்த புத்த பெருமானின் பெயரிலும் அபகரிக்கப்படுகின்றது.



முகாம் பகுதிகள் என்ற பெயரில் யாழ். குடாநாட்டில் மட்டும் இன்னமும் படையினர் வசம் 3 ஆயிரத்து 214 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் பெரும்பாலான பகுதி தமிழ் மக்களுக்குச் சொந்தமானது. அறுதி உறுதிகளைக் கொண்ட காணிகள். படையயினர் இப்படி முகாம் தேவைக்கு என்று ஆக்கிரமித்து வைத்துள்ள பகுதியிலேயே விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

புதிய திஸ விகாரைக்கு 2019ஆம் ஆண்டே அடிக்கல் இட்டப்பட்டது. அப்போதே இது சர்ச்சையானது. கௌதம புத்தரின் பெயரில் அபகரிக்கப்படும் 8 ஏக்கர் நிலத்திற்குள் பவாணி வீதி என்னும் போக்கு-வரத்து வீதியும் உள் அடங்குவதும் விகாரையின் பிரதான கட்டுமானங்கள் மட்டும் 18 பரப்பைத் தொட்டு நிற்பதும் 2019ஆம் ஆண்டே கொழும்பில் அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்காவின் கவனத்திற்குக் கொண்டவரப்பட்டிருந்தது. தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடாக வரைபடங்களுடன் ஜனாதிபதியிடம் விவரங்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இராணு-வத்தின் யாழ். கட்டளைத் தளபதி, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் விவரங்களைச் சமர்ப்பித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினனர் மாவை சோ.சேனாதிராசா அப்பகுதியை விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கும் எந்தப் பயனும் கிட்டவில்லை. புதிய விகாரை அமைந்துள்ள சூழலான 8 ஏக்கர் நிலப்பகுதியினையும் உள்ளடக்கிய வகையிலான நிலத்தில் இதுவரை 8 உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது நிலத்தின் உறுதிகளும் ஆதாரங்களாக பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அப்படியிருந்தும் விகாரையின் கட்டுமானத்தை யாரும் தடுத்து நிறுத்தவில்லை.



வலி. வடக்கு பிரதேச சபையிலே இந்த விகாரை அமைக்கப் படுவதற்கு எதிராக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. படையினரின் பிடியில் உள்ள தமிழ் மக்களிற்குச் சொந்தமான தனியாரின் காணிகயில் அத்துமீறி படையினரின் உதவியோடு அமைக்கப்படும் விகாரைக்கு எதிரானு கண்டணத் தீர்மானம் 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிரதிகள் 2022-08-12 இல் அப்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் மூத்த செயலாளர் புத்தசாசன அமைச்சின் செயலாளரிடம் இருந்து விளக்கம் கேட்டு, ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டு, அதன் பிரதியும் வலி. வடக்கு பிரதேச சபைக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வாறெல்லாம் தமிழ் அரசுக் கட்சியினர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தபோதும் 100 அடிவரை விகாரையின் கட்டடம் உயர்ந்துகொண்டே சென்றது. அப்போது தமிழ் அரசுக் கட்சி தவிர (அன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வேறு எந்தவொரு தரப்பும் இந்த விகாரைக் கட்டுமானத்திற்கு எதிர்ப்போ கண்டனமோ தெரிவித்ததில்லை. அதனைத் தடுத்து நிறுத்த எந்த முயற்யிலும் ஈடுபட்டதுமில்லை.

இவ்வாறு 2020இல் கொதிநிலை கண்ட ஒரு விடயம் பின்னர் கொரோனா, பொருளாதார நெருக்கடி என்பவற்றின் காரணமாக எவராலும் கண்டுகொள்ளப்படாமல் போய்விட்டது. தற்போது கள்ளன் போன பின்பு விசுவா பொல்லை எடடா என்னும் கதை கணக்காக போராட்டங்கள், எதிர்ப்புகளைத் தொடங்கியிருக்கிறார்கள்..

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2023 இல் வெளியிடப்பெற்றது.